"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஆடி - ஆவணி - புரட்டாதி - 2019



ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

பெருமையுடன் 21வது வருடத்தில்

# RUBY'S

CATERING

020 8799 7180

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு





திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்
அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா





ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180

mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 27

# கலசம்
KALASAM

ஒலி 94

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

**கலசம்**
**நிருவாகக் குழு**

**ஆசிரியர்**
க ஜெகதீஸ்வரன்

**உதவி ஆசிரியர்கள்**
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

**விநியோகம்**
சோ நிரஞ்சன்

**விளம்பரம் தொடர்புகள்**
மா இந்துசேகரன்

**நிருவாகம்**
வ இ இராமநாதன்

**வெளியீடு**
சைவ முன்னேற்றச் சங்கம்

**முகவரி**
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

**மின்னஞ்சல்**
email:
smsukkalasam@gmail.com

# பாலர்களும் பஞ்சபுராணமும்

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்" -குறள்:111

என்பார் திருவள்ளுவர். தாய் தந்தையருக்குத் தம் குழந்தைகளின் மழலை எப்பொழுதும் சுவையாகவே இருக்கும். அதில் எள்ளவும் சந்தேகம் இல்லை. குழந்தைகள் வளரும்போது அவர்களுக்குத் தமிழையும் சைவத்தையும் சில பெற்றோர் சொல்லிக் கொடுக்கிறார்கள்; முறைப்படி வளர்க்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது. சமயப் போட்டிகளில், பாடசாலைப் போட்டிகளில் பங்கெடுக்கச் செய்கிறார்கள். வீட்டிலே, தமிழ் மக்கள் கூடும் இடங்களிலே இந்தப் பிள்ளைகளின் திறமையை வெளிக்கொணர்ந்து ஊக்குவிப்பதும் பாராட்டப்படவேண்டியதொன்று. ஆனால், இதையே கோயிலில் பஞ்சபுராணம் பாடும்வரை கொண்டு செல்லாமா என்பது சிந்திக்கவேண்டிய விடயம். **திருஞானசம்பந்தர் மூன்று வயதிலே தேவாரம் அருளியது வேறு; நம் சிறுவர்கள் பாடுவது வேறு.**

**பஞ்சபுராணம் என்பது, முன்னரும் பலமுறை கலசத்திலே குறிப்பிட்டதுபோல, பூசை வழிபாடுகளில் முக்கியமான ஓர் அங்கம். அதற்கென்று விதிமுறைகள், ஆசாரங்கள் உள்ளன.** எனவே அதிலே மழலை மாறாத சிறுவர்களைப் பாடவைப்பது ஏற்புடைத்தா என்று தெரியவில்லை. பஞ்சபுராணத்தை அவமதிப்பது போலவே அது அமையும்; புனிதம் கெட்டுவிடும். அப்படியானால் எப்போதும் வயதுவந்தவர்கள்தான் பாட வேண்டுமா? அப்படிக் கட்டுப்படுத்தினால், எப்படி எதிர்காலத்தில் சிறுவர்கள் பாடுவார்கள்? அவர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்கவேண்டாமா? என்று பல கேள்விகள் எழலாம்; எழுகின்றன.

சிறுவர்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்து அவர்களைக் கோயில்களிலே ஒரு பண்ணிசைக் கச்சேரி போலப் பாடவிடலாம். வேறு மேடைகளில், வீட்டு விழாக்களில் அவர்களைப் பாட ஊக்குவிக்கலாம். அதனால் அவர்களுக்குத் தன்னம்பிக்கையும் பாடும் ஆற்றலும் அதிகரிக்கும். அப்படிப் பாடி வரும்பொழுது சமயஅறிவில் முதிர்ச்சி ஏற்படும்; தேவாரம் பாடுவதிலே ஓர் ஈடுபாடு ஏற்படும். அந்த நிலைக்கு, சிறுவராக இருந்தாலும், வந்துவிட்டால்; முதிர்ச்சி அடைந்துவிட்டால் அவர்கள் பாடலாம். அதுவரை பொறுத்திருக்கவேண்டும். அதுவே முறை.

**க ஜெகதீஸ்வரன் - ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| தொழுவார்க்கு அருள்செய் சோதி | 03 |
| வல்லமை நிலைநாட்டியே தலைமை.... - கந்தபுராணச் சிந்தனைகள் | 07 |
| பொலன்னறுவைச் சிவன்கோயில்கள் - பயணக் கட்டுரை | 09 |
| ஒண்ணாமை உணராதேன் - விமரிசனம் | 13 |
| சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர்...... | 16 |
| Periya Puranam for the Common Reader - நூலாய்வு | 19 |
| நாரதர் கலகம் | 31 |
| இயற்கையும் இறைவனும் | 34 |
| ஏனனத்தால் வந்த சாபம் - உண்மை நிகழ்வு | 37 |
| கண்ணனும் தாத்தாவும் | 38 |
| Hinduism in search of Answers | 44 |
| Tirukkural | 47 |


**அட்டைப்படம்: திருவாதவூர்**

# தொழுவார்க்கு அருள்செய் சோதி

வித்துவான் க வேந்தனார்

உலக போகங்களை நுகர்ந்து வாழ்கின்றவர்கள் அவற்றிலேயே ஊறி அருளை மறத்தல் கூடாது. இறைவனின் திருவருள்தான் எம்மை உய்விக்க வல்லதென்பதை உணரவேண்டும். உணர்ந்துணர்ந்து உருகவேண்டும். இவற்றுக்கெல்லாம் காரணமாக விளங்குகின்ற உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருத்தல் என்பது எளிதான செயலல்ல. உள்ளம் எம்மை உலக இன்பத்திலே ஈடுபடுத்தும்; ஈர்த்துச்செல்லும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்னும் தீய பண்புகள் உள்ளத்தைத் தம் விளைபுலமாக்கிக் கொள்ள விரும்பும். அவற்றுள் அழுக்காறு மிக மிகக் கொடியது. அயலவர்க்கு உண்டாகும் நன்மைகளைக் கண்டவுடன் அவர்கள்மேல் வெறுப்புக்கொள்ளும் வண்ணம் மனதைத் தூண்டும். மனம் அவரின் செல்வத்தைப் பெறவேண்டும் என்று ஆசைப்படும். ஆசை முற்றுப்பெறாவிடின் கோபங்கொள்ளும். கோபங் கொடிய சொற்களைக் கூறிச் செல்வம் உடையவர்களைத் திட்டி வையச்செய்யும். இவ்வாறு தூய்மை கெட்ட உள்ளம் இறைவனை மறந்துபோகும். இறைவனை மறந்து வாழ்கின்ற வாழ்வு பயனற்றது. அந்தப் பயனற்ற வாழ்வை விடுத்து அல்லும் பகலும் இறைவன் திருப் பெருவாழ்வுக்கு எம்மை வழிப்படுத்தவேண்டும். திருஞானசம்பந்தர் இறைவனையே எண்ணித் தொழுது வாழ்கின்ற இன்ப நெறியைக் கைக்கொண்டு வாழும்வண்ணம் எம்மை ஊக்குகின்றார்.

## நாளும் மிகுபாடல்

எப்பொழுதும் அன்புடன் பல பாடல்களால் இறைவனை ஏத்துங்கள். இறைவன் பாடலில் மிக விருப்புடையவன். கீதத்தை மிகப்பாடும் அடியார்களை வாழ்விப்பவன். "ஏழிசையாய் இசைப்பயனாய்" இலங்குகின்றவன். இன்னிசை இறைவனுடன் எமது உள்ளத்தை இசைவிக்கும் தன்மை வாய்ந்தது. இறைவனின் பொருள்சேர் புகழை இன்னிசை அமைந்த பாட்டுக்களால் பாடிப் பரவி உருகுகின்ற பத்தர்களைக் கூடிக்களிக்கின்ற இன்பமே மேலான இன்பம். இறவாத இன்ப அன்பை எளிதாகப் பெறுகின்ற வழி.

பாடு வாரிசை பல்பொருட் பயன்நுகர்ந்து அன்பாற்
கூடு வார்துணைக் கொண்டதம் பற்றறப் பற்றி
தேடு வார்பொரு ளானவன் செறிபொழில் தேவூர்
ஆடு வானடி அடைந்தனம் அல்லலொன் றிலமே

எனத் தேவூர் ஈசனையும் திருஞானசம்பந்தர் பாடிப் பரவுகின்றார். இதில் அடியார்கள் பலதிறப்பட்ட இசையைப் பாடுகின்றார்கள். அங்ஙனம் பாடும்பொழுது பொருட்பயன் நுகர்ந்து பாடுகின்றார்கள். பொருள் - இறைவன், பொருட்பயன் - இறைவனின் இன்னருள். இறைவனை மெய்ப்பொருள் என்று வள்ளுவர் வழுத்துகின்றார்.

"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி"

என்பது திருக்குறள். பாடிப்பரவி உருகும் பத்தர்கள் மெய்ப்பொருளாகிய இறைவனின் இன்னருளை நுகர்ந்து நுகர்ந்து களிக்கின்றார்கள். இறைவனைப் பாடுகின்றபொழுதுதான் இசை ஏற்றமடைகின்றது. இறைவன் புகழை இசையில் அமைத்துப் பாடுதலால் எய்துகின்ற இன்பமே இன்பம். நாயன்மார்களும் ஆழ்வார்களும் பண் ஒன்ற இசைபாடி இறைவன் புகழை இயம்பிய

அருட்பாக்களில் நிறைந்துள்ள பத்திச் சுவையை நாம் அள்ளிப்பருகி ஆனந்தமடைகிறோம். **“வட்டமிட்டுத் திசைதொழுது ஆடியும் பாடுவார் சிந்தையுட் சேர்வாரே”** என்று வரும் சம்பந்தர் செந்தமிழ்த் தொடையையும் நோக்குக. நாளும் மிகுபாடல் பாடிப்பரவி ஆடுங்கள். இறைவன் பாடியபடியே கூடிநின்று கும்பிடுகின்ற அடியார்களைத் தன்குடியாகக் கொண்டுவக்கும் கொள்கையாளன்.

## ஞானமிகும் நல்லமலர்

பாடி ஆடி இறைவனைப் பரவுகின்ற அடியார்கள் நல்ல மலரும் சூடித் தொழுவார்கள். இறைவனுக்கு மரம், கொடி முதலியவற்றில் உள்ள மலர்களைச் சூட்டியும் தொழுவார்கள். அந்த மலர்களிலும் மேலான மலர் ஒன்றும் உள்ளது. அதுதான் ஞானமலர். ஞானமாகிய மலரையிட்டு இறைவனைத் தொழுகின்ற பொழுதுதான் அவன் எம்மை ஆட்கொள்வான். உலகத்தார்கள் தீண்டப்படாமல் பக்குவம் வாய்ந்த தூயமெய்யுணர்ச்சி என்னும் ஞானமலர்தான் ஆருயிர்கள் ஆண்டவனுக்கு அணியக்கூடியது. இந்த ஞானமலரிலே அன்புத்தேன் கமழும். பத்தர்கள் ஞான மலரால் தொடுத்த மாலையைக் கொண்டு இறைவனின் திருவடிகளைக் கட்டுவார்கள்.

“ஆர்மின் ஆர்மின் நாண்மலர்ப் பிணையலில்
தாள்தளை இடுமின்”

என மாணிக்கவாசகர் ஆர்வக் குரலால் அடியார்களை அழைக்கின்றார். கண்ணபிரான் கழலடி களை, அன்பனாகிய சகாதேவன் ஞானமலர் மாலையாற் கட்டிய வரலாற்றைக் கருதுங்கள்.

“உன்னை நீதானும் உணராதாய் உன்வடிவம்
தன்னைநீ காட்டத் தளைத்திடுவன் யான் என்றான்”

“அன்பால் நீஎன்னை அறிந்தே பிணித்தமையால்
என்பாதந் தன்னை இனிவிடுக”

எனவரும் தொடர்களால் ஞானமலர்ப் பிணையலால் கண்ணபிரானின் தாள்களைத் தளையிட்ட சகாதேவனின் தவச் சிறப்பை உணர்கின்றோம். ஞானமலராகிய மெய்யுணர்ச்சி இறைவனின் தாளிணை சேரும் தனிப்பெரும் பேற்றைத்தரும் சிறப்புடையது என்பதை எமக்குணர்த்தி எம்மை ஈடேற்றக்கருதிய தமிழ் ஞானசம்பந்தர், ஞானமிகு நல்லமலர் என்றார்.

## வல்ல வகையால்

ஞானமிகு நல்ல மலரை உங்களால் இயன்றவகை இறைவனுக்குச் சூட்டவேண்டும். இடைவிடாது சூட்டவேண்டும். எள்ளளவும் உலகத்தார்கள் என்னும் மாசு ஞானமலரில் படியாதவண்ணம் பாதுகாத்தல் வேண்டும். என்னென்ன நெறிகளால் ஞான நன்மலரை இறைவனுக்குச் சூட்டமுடியுமோ அவற்றையெல்லாம் ஆய்ந்து கண்டு ஆராமையுடன் சூட்டவேண்டும்.

“ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்”

என்பது திருக்குறள். ஞான மலரை அர்ச்சனை வயலுள் அன்பு வித்திட்டு வளர்க்கவேண்டும். அன்பாகிய வித்திலே தோன்றி மலர்ந்த ஞானமலரை வல்லவகையால் ஓம்பி வாழவேண்டும்.

மெய்ம்மையாம் உழவைச் செய்து
விருப்பெனும் வித்தை வித்திப்
பொய்ம்மையாங் களையை வாங்கிப்
பொறையெனும் நீரைப் பாய்ச்சி

தம்மையும் நோக்கிக் கண்டு
தகவெனும் வேலி யிட்டு
செம்மையுள் நிற்ப ராகில்
சிவகதி விளையு மன்றே

எனவரும் நாவுக்கரசர் திருநெறிப் பாடலையும் நோக்குக. ஞான மலரை மாசுபடாத வண்ணம் காத்து வந்தால், சிவகதியாகிய பயனை நல்கும். "வல்லவகை" என்பது தம்மையும் நோக்கிக் கண்டு தகவு எனும் வேலி இடலாகிய செயலைக் குறிக்கின்றது. "தம்மை உணர்ந்து தமையுடைய தம் உணர்தலே" ஞானமலராகிய மெய்யுணர்ச்சியால் எய்தும் பேறாகும். ஞானமிகு நல்லமலரை வல்லவகையால் காத்து வாழும் வண்ணம் எம்மை ஊக்கி வழிகாட்டும் சம்பந்தரின் செந்தமிழ்த் தொடர்கள் ஞானத்தேனைச் சொட்டுகின்றன.

## தோளினொடு கைகுளிரத் தொழுவார்

ஞானமலர் இட்டுத் தொழுகின்ற அடியார்களின் தோள்களும் கைகளும் அன்பினால் நனைந்து குளிரும். கைகளைத் தூக்கும்பொழுது அவற்றை உடைய தோளிணைகள் குளிர்கின்றன; தொழும்பொழுது கைகள் குளிர்கின்றன. இவ்வாறு தொழும்பொழுது தோள்களும் கைகளும் அகத்தில் ஊறிப்பெருகும் அன்பினால் குளிர்கின்றன.

"குரம்பைகொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது
உள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன்"

எனவரும் திருவாசகத் தொடர்களை நோக்குக. இதனால் உள்ளத்தில் நின்று ஊறிப் பெருகுகின்ற இறை அன்பால் உடலும் இன்தேன் சுரக்கின்றது என்பதை உணர்கிறோம். மயிர்க்கால்தோறும் அற்புதமான அமுததாரகைகள் சுரக்கின்றன. சுர்ந்து எலும்பின் துளைகளில் எல்லாம் ஏறுகின்றன என்று மணிவாசகர் கூறி ஆனந்தமடைகிறார். இதனையே சம்பந்தர் செந்தமிழ் "தோளினொடு கைகுளிரத் தொழுவார்" எனச் செப்புகின்றது. "அன்பினால் என்தன் ஆவியோடு ஆக்கை ஆனந்தமாய்க் கசிந்துருக" என்பதையும் எண்ணுங்கள்.

## தொழுவார்க்கருள்செய் சோதி

ஆவியும் யாக்கையும் ஆனந்தமாய்க் கசிந்துருக நின்று தொழுகின்ற அடியார்களை ஆட்கொண்டருள்வான். அவன் ஒளி உருவமாய் வைகாவிலே எழுந்தருளி உள்ளான். அவனை அயரா அன்பு செய்து தொழுங்கள். அவன் பொருள்சேர் புகழை இன்னிசைப் பாக்களால் பரவித் தொழுங்கள். ஞானமிகு நல்ல மலர் இட்டு வல்ல வகையால் தொழுங்கள். அவன் தொழுகின்ற அடியார்களின் உள்ளத்தே நின்று உள் ஒளி பெருக்கி உய்யக்கொள்ளும் சோதி.

"ஒப்புனக் கில்லா ஒருவனே அடியேன் உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே" என்றும், "ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி" என்றும் சோதியாய் நின்றருளும் இறைவனை மாணிக்கவாசகர் சொல்லிப் பரவுகின்றார்.

## நீளவளர் சோலை

சோதியாய் இறைவன் எழுந்தருளும் திருவைகாவிலே உயர்ந்தோங்கும் சோலைகள் உள்ளன. அச்சோலைகளில் தென்னைகள் செழித்து வளரும். திருவருளால் செழித்தோங்கும் தென்னைகள் பல குலைகளை ஈன்று பயன்தருகின்றன. குலைகளில் நெருங்கிப் பழுத்த தேங்காய்கள் விழும்வண்ணம் வாளை மீன்கள் நீர்நிலைகளில் நின்று துள்ளிப்பாய்கின்றன. தென்னைகள் ஞான நிலை எய்திய அடியார்களையும், முதிர்ந்த தேங்காய்கள், அவர்களின் ஞான உணர்ச்சி முட்டின்றி நிறைந்து பயன்தரும் பண்பையும் குறிப்பாகக் காட்டுகின்றன. வயல்களில் உள்ள நீர்ப்பெருக்கால் மேலெழுந்து துள்ளிப்பாய்கின்ற வாளை மீன்கள், அடியார் கூட்டத்தின் நடுவே தங்கிவாழ்ந்த சிறப்பால் இறைவன் அருளைப் பெறும் வேட்கை மிக்கவராய்க் குருவைத் தேடித்திரியும் ஞான வேட்கையாளரையும், தென்னைகள், வாளை மீன்கள் துள்ளித் தம்மைத் தீண்டியவுடன் தேங்காய்களை உதிர்த்தல், ஞான வேட்கை கொண்ட அடியார்களுக்குக் குருவாய் எழுந்தருளி அவர்களின் பக்குவ முதிர்வு நோக்கி ஞானத்தை நல்கி ஆட்கொள்ளலையும் குறிப்பாகக் காட்டுகின்றன.

## மதுநாற மலர்விரியும்

இங்ஙனம் வாளைமீன்கள் துள்ளிப் பாய்தலால், நீர் நிரம்பிய வயல்களிலே உள்ள பேரரும்புகள் எல்லாம் மலர்ந்து தேன் மணக்கின்றது. இச் செயல் பக்குவம் வாய்ந்த ஈருயிர்கள் இறைவன் அருளைப் பெற்று உய்வடைதலைக்கண்ட ஏனையோரும் தமது உலகநாட்டங்களை ஒழித்து, அன்புகொண்ட உள்ளத்தினராய் இறைவன் அருளைப் பெறமுயல்வதைக் குறிப்பாகக் காட்டுகின்றது. பேரரும்புகளாய் இருந்த நிலை, உலக இன்பங்களிலே நாட்டமுடையவராய்த் தம் நலம் கருதி அன்பின்றி வாழ்ந்தமையைக் குறிக்கும். வாளை மீன்கள் துள்ளிய அதிர்ச்சியினால் பேரரும்புகள் விரிந்த செயல், ஞானவேட்கை கொண்ட உள்ளம் தம் நலத்தைவிட்டுப் பிற உயிர்களையும் போற்றி இறைவனுக்கு ஆட்படும் உள்ளத்தை வேட்கைவாய்ந்து விரிவைக் காட்டுகின்றது. மலர்ந்த மலர்களில் மது நாறுதல், உலக வேட்கையை விடுத்து அகன்ற உள்ளத்தில் இறை அன்பு தோன்றிப் பிற உயிர்களுக்கும் பயன்படுதலைக் காட்டுகின்றது. இவற்றையெல்லாம் திருவைகாவிலே கண்டு திருவருளை வியந்த திருஞானசம்பந்தர் திருநெறிய தமிழாற் பாடிச் சிந்தை மகிழ்ந்தார்.

நாளுமிகு பாடலொடு ஞானமிகு
    நல்லமலர் வல்லவகையால்
தோளினொடு கைகுளிர வேதொழும்
    அவர்க்கருள்செய் சோதியிடமாம்
நீளவளர் சோலைதொறும் நாளிபல
    துன்றுகனி நின்றதுதிர
வாளைகுதி கொள்ளமது நாறமலர்
    விரியும்வயல் வைகாவிலே

குறிப்பு:

வல்லவகையால் - இயன்றவாறு, சோதி - ஒளி வடிவானவன், நாளி - தென்னை, உதிர - உதிரும்படி, வாளை - வாளை மீன்கள், குதிகொள்ள - துள்ளிப்பாய, மது - தேன்.

**-நன்றி: தன்னேர் இலாத தமிழ்**

# வல்லமை நிலைநாட்டியே தலைமை உருவாகிறது

## கந்தபுராணச் சிந்தனைகள்

## Dr க சிவலோகநாதன்

ஒரு சாதாரண குடியிலே பிறந்த ஒருவன் கடும் முயற்சி செய்து முன்னேறுகிறான். அது கல்வியானாலும் சரி, செல்வத்தினாயினும் சரி, அவனுடைய பெருமையையும் வளர்ச்சியையும் அவனுடைய சுற்றத்தினருங்கூடக் கணிப்பில் எடுப்பதில்லை. கணிப்பிற்கு எடுக்கப்பட வேண்டுமாயின் ஏதாவது ஒரு பெரிய காரியத்தைச் செய்து வல்லமையை நிலைநாட்ட வேண்டும். அதன்பிறகே அதனுடைய வித்துவம் கணிப்பிற்கு எடுக்கப்படுகிறது. இது கந்தபுராணம் காட்டும் பாடம். சூரனால் பெரும் துன்பமடைந்த தேவர்களின் தலைவன் இந்திரன், பிரம்மா, விஷ்ணு தேவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து சிவபெருமானை வணங்குகின்றனர். "முதல், இடை, முடிவு, அருவம், உருவம், அருவுருவம், காரணம், பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம் ஆகிய இவைகள் எதுவும் இல்லாமல் வேதங்களைக் கடந்து நிற்கும் இறைவனே! சூரனை அழிக்க உன்னை நிகராகுமாறு ஒரு புதல்வனை நீயே உன்னிடம் தோற்றுவித்துத் தரல் வேண்டும்" என்று வேண்டினர். அவர்களின் வேண்டுகோளின்படியே சிவபெருமான் முருகப்பெருமானைத் தோற்றுவிக்கின்றார்.

ஆதியும் நடுவு மீறும் அருவமு முருவு மொப்பும்
ஏதுவும் வரவும் போக்கு மின்பமும் துன்பு மின்றி
வேதமும் கடந்து நின்ற விமல!ஓர் குமரன் தன்னை
நீதரல் வேண்டும் நின்பால் நின்னையே நிகர்க்க வென்றார்

-திருவவதாரப்படலம்

அவ்வாறாயின் தேவர்கள் அவரைத்தம் தலைவராகத் தாமாகவே ஏற்றுக் கொண்டாயிருக்க வேண்டும். அவ்வாறு நடைபெறவில்லை. குழந்தைக் குமரன் விளையாடித் திரிகின்றான். இவ்வாறு திருவிளையாடல் செய்த குமாரமூர்த்தி ஒரு விளையாட்டை விரும்பி ஆடத் தொடங்கினான்.

"...........உலகம் எல்லாம்
சென்றருள் ஆடல் செய்யும் திருத்தகு குமரன் பின்னர்
ஒன்றொரு விளையாட் டுள்ளத் துன்னியே புரிதல் உற்றான்"

அதன்படி சிறுவன் முருகன் எட்டுத் திசைகளிலுமுள்ள சிறப்பு மலைகளை எல்லாம் ஒரே இடத்தில் சேர்ப்பான். பின்னர் இருந்த இடத்திற்கு மாறாக நிலை நிறுத்துவான். எல்லாக் கடல்களையும் ஒரு கடலாக்குவான். கங்கை ஆறு பாய்ந்து செல்லாதபடி தடுத்து நிறுத்துவான். திசையானைகளை ஒன்றையொன்று போர்புரியும்படி செய்வான். பூமியின் மேலுள்ள மலைகளை எல்லாம் பாதாளம் செல்லச் செய்வான். இந்திரன் முதலான தேவர்கள் இருக்கும் பழைமையான நகரங்களை முன்பு இருந்த அமைப்பு மாறும்படி பெயர்த்து வேறு வகையில் அமைப்பான். இவ்வாறு எங்கும் உயிர்களுக்கு இம்சையின்றி, அல்லோல கல்லோலம் நடைபெற்றது. இதைக் கண்ட இந்திரன் இவற்றைச் செய்பவன் யாரெனச் சிந்திக்கும்போது சிறுவன் முருகன் தோன்றினான். இந்திரனும் தேவர்களும் முருகனுடன் யுத்தம் புரிந்தனர். சிறுவன் முருகன் விட்ட அம்பு ஒன்று இந்திரனின் ஐராவத யானையைக் கொன்றது. அவர்கள் விட்ட பலம் வாய்ந்த

ஆயுதங்களெல்லாம் சிறுவன் முருகனின் மீது பட்டுப் பொடியாயின. இந்திரன் தேவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டார்கள். நிலைமையைக் கண்ணுற்ற நாரதர் வியாழபகவானிடம் நிகழ்வுகளைச் சொன்னார். வியாழபகவான் முருகனிடம் சென்று மன்னிப்புக்கோரி மன்றாடி இந்திரனையும் மற்றைய தேவர்களையும் முருகப்பெருமானின் பெருங்கருணையினால் உயிர்பெற்றெழச் செய்கின்றார். இவ்வாறாக முருகப்பெருமானால் உயிர்கொடுக்கப்பட்ட தேவர்களுக்கு நல்லறிவு உண்டாயிற்று. நாம் கந்தனோடா போரிட்டோம் என வாடினார்கள்; கலங்கினார்கள்; இரங்கினார்கள்; அழுதார்கள். அழகிய முகத்தின் பொலிவை இழந்தார்கள்; தம்மையே இகழ்ந்துகொண்டு அம்முருகப்பெருமானின் மலரடிகளைத் தலையில் வைத்தார்கள்; முருகப்பெருமானை வணங்கித் துதித்தார்கள்; கொண்டாடினார்கள். தாம் விட்ட பிழைக்குத் தண்டனையாகத் தம்மைக் கொன்று தமது பாவங்களை நீக்கியமைக்கு நன்றி கூர்ந்தார்கள். அதன்படி தம்மை அடியவர்களாகக் கொடுக்க எண்ணினார்கள். ஆனாலும் தாம் ஏற்கெனவே அடியார்களாதலால் அதையும் செய்ய முடியாது திகைத்தார்கள். அவ்வாறானாலும் தெளிவற்ற மூடர்களாகிய தாங்கள் செய்த குற்றத்தை மனதிற் கொள்ளாமல் மன்னிக்குமாறு வேண்டினார்கள். அப்போது முருகப்பெருமான், "முன்னர் நீங்கள் எம்மை ஒரு குழந்தையாக நினைத்துப் போரிட்டீர்கள். நம்முடைய வலிமையும் மகிமையும் இன்னும் நன்றாக நீங்கள் அறியும் வண்ணம் காட்டுவோம்" என்றுகூறி ஒரு பெருவடிவம் கொண்டு நின்றார்.

அன்ன தெனினும் தெளிவில் பேதையடி
　　யேம்பிழை யனைத்தும் உள்மேல்
உன்னலை பொறுத்தியென வேகுமா
　　வேளவை உணர்ந்து நமைநீர்
முன்னமொரு சேயென நினைந்து பொரு
　　தீர்நமது மொய்ம்பு முயர்வும்
இன்னும்உண ரும்படி தெரிந்துமென
　　ஒருருவம் எய்தினரே

-திருவிளையாட்டுப்படலம்-87

அவ்வடிவைக் கண்டு திகைத்த தேவர்களுக்கு அதைக் காணக்கூடிய வலிமையை முருகப்பெருமான் கொடுத்தார். தேவர்கள் அவருக்கு ஒரு மலையை அமைத்து அபிஷேகம் செய்து தாம் படைவீரர்களாக இருக்க, தங்களுக்கு அவர் சேனாதிபதியாக இருக்கும்படி வேண்டினார்கள். அந்த மலைக்கு "கந்தகிரி" என்று பெயரும் ஏற்பட்டது. எவ்வுயிர்க்கும் துன்பமற்ற வல்லமை நிலைநாட்டலின் பின்னரே முருகப்பெருமான் தேவசேனாதிபதியாகினார். இவ்வாறாகத் தலைமை, வல்லமை நிலைநாட்டுதலின் மூலமே, நிலைநாட்டப்படுகிறது என்பதைக் கந்தபுராணம் சொல்லா நிற்கிறது.

## The Law of Action and Reaction

*If there is an action, there must be a reaction. The reaction will be equal in force and of a similar nature. Every thought, desire, imagination and sentiment causes reaction. Virtue brings its own reward, vice brings its own punishment. This is the working of the law of reaction. God neither punishes the wicked nor rewards the virtuous. It is their own Karmas that bring reward and punishment. It is the law of action and reaction that brings the fruit. No one is to be blamed. The law operates everywhere with uneasing precision and scientific accuracy.*

**H.H Sri Swami Sivananda Maharaj**

# பொலன்னறுவைச் சிவன்கோயில்கள்

## பயணக்கட்டுரை

**Dr க கதிர்காமநாதன்**

தமிழர்கள் இலங்கையை முன்பு ஆண்டார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாகவும் சான்றாகவும் இருப்பவை இக் கோயில்களே. சோழர்கள் ஆகிய தமிழர்கள் பொலன்னறுவையைத் தலைநகரமாக்கி ஆட்சி செய்தனர். பொலன்னறுவை முதன்முதலாக இலங்கையின் தலைநகரமாகியது. இவர்களின் இருந்ததனாலேயே அகழ்வு ஆராய்ச்சிமூலம் இங்கு பத்துச் சிவன்கோயில்களும் ஐந்து விஷ்ணு கோயில்களும் ஒரு காளி கோயிலுமாகப் பதினாறு இந்துக் கோயில்கள் கண்டு பிடிக்கப்பட்டன. எனினும் இவை யாவும் சோழர்களாலேயே கட்டப்பட்டன என்று கூற ஆதாரங்கள் இல்லை. இலங்கைத் தொல்பொருள் துறையினர் இவற்றை எண்கள் மூலம் அடையாளம் இட்டுள்ளனர்.

### சிவன்கோயில் 2

தனிக் கல்லால் இந்தக் கோயில் நிர்மாணிக்கப்பட்டுள்ளதால் இந்தச் சிறு கோயில் இன்றும் முழுமையாக இருக்கிறது. இதைவிட, பூசை, அபிஷேகம். ஆராதனை, பொங்கல் யாவும் நடைபெற்று சிவபெருமான் தற்போதும் அருள்புரிந்துகொண்டிருக்கிறார். சோழர்கள் இக்கோயிலுக்கு இட்டபெயர் வானவன் மாதேவி ஈச்சரமாகும். இப் பெயர் இராஜ இராஜ சோழனின் மனைவி - அவரின் பெயரால் - வானவமாதவி - இடப்பட்டதாகும்.

உலக பாரம்பரியங்களில் (World Heritage Site - UNESCO) சிவன்கோயில் 2 உம் ஒன்றாகும். மேலும் சிவன்கோயில் 1, அரச மாளிகைகள், பழைய கட்டடங்கள், விகாரைகளும் இவற்றுள் அடங்கும்.

### பயணம்:

2018 ஏப்பில் ஆறாம் திகதியன்று மட்டக்களப்பு கிருஷ்ணா கபேயில் காலை உணவை முடித்துக்கொண்டு மனைவியார் உட்பட ஐந்துபேர் சென்றோம். செல்லும் வழியில் மகாவலி கங்கையைக் கண்டு, வாகனத்தை நிறுத்தி, சூழலை இரசித்துப் படமெடுத்தேன். இந்தக் கங்கை நங்கைதான் பேராதனைப் பூங்காவைத் தழுவிச் செல்கிறாள் என்ற எனது இளமைக்கால நினைவுகள் மனத்தில் ஓடின. மேலும் காடுகளைத் - யானைகள் உள்ளவை - தாண்டிச் சென்றோம். இயற்கை என்னும் எழில் நங்கையின் வண்ணத்தைக் கண்ணுறத் தவறவில்லை.

சுமார் 10 மணியளவில் பொலன்னறுவையை அடைந்தோம். நுழைவாயிலில் காவலாளிகள் உளர். ஒரு மர நிழலில் வாகனத்தை நிறுத்திவிட்டு முதலில் தோன்றிய அரச மாளிகைகளைப் பார்த்தோம். சிறு வயதில் தந்தையுடன் சென்றபோது புதினமாகத் தோன்றிய இந்தப் புராதன இடங்கள் இப்போது புனிதமாகத் தோன்றின. படிகளில் ஏறிச்சென்று அரசர்களின் வதிவிடங்கள், நீராடும் இடங்கள், புத்தர் சிலைகள் யாவற்றையும் பார்த்தோம்.

சிவன்கோயில் எங்கே என்று ஒருவரிடம் வினாவியபோது, இந்த வழியே செல்லுங்கள், இப்போது பூசை நேரம், வழிபாடு தரிசிப்பீர்கள் என்று கூறினார். இருபுறமும் மரங்கள் சூழ்ந்த சாலையில் சென்றோம். அப்போது வெளிநாட்டவர்கள் பலர் மிதிவண்டிகளில் உல்லாசமாக மகிழ்வாகச் செல்வதைக் கண்டோம்.

அன்று வெள்ளிக்கிழமை. கோயில் நாலுபக்கமும் சூழ்ந்துள்ள பெரிய பிரதேசத்தில் சிறிதாகத் தோன்றியது. பக்கத்தில் மக்கள் பொங்கல் பொங்குவதைக் கண்டோம். கோயிலின் முன்பக்கம் சென்றபோது அர்ச்சகர் ஒருவரைக் கண்டோம். அவர் அப்போதுதான் கோயிலுக்கு வந்திருக்கவேண்டும். நாங்கள்

கோயிலைப் பார்ப்பதற்கு என்றுதான், வேறு எவ்வித எதிர்பார்ப்பும் இன்றிச் சென்றோம். ஆனால், அர்ச்சகர், பொங்கல் என யாவற்றையும் பார்த்தபோது "கும்பிடப் போனவனுக்குக் குறுக்கே தெய்வம் வந்தது" போல இருந்தது.



முன்னால் நின்று கும்பிட ஒரு சிறு இடம் இருந்தது. எம்மைக் கண்டவுடன் அங்கிருந்த சிங்களச் சகோதரர்கள் இடம்விட்டுக் கொடுத்தனர். அவர்களோடு சிறுவர்களும் இருந்தனர். கோயிலிலுள்ள சிவலிங்கம் சிறிதாக இருந்தது. உருவஅமைப்பு எவ்வித பழுதும் அடையாமல் அப்படியே இருந்தது. அர்ச்சகர் அலங்காரத்தைக் கலைத்து, சிவனுக்கு அபிஷேகம் செய்தார். மக்கள் கொண்டுவந்து கொடுத்த பாலாலும் அபிஷேகம் செய்தார். பின்னர், திருநீற்றால் மூன்று குறிவைத்துப் பொட்டிட்டு அலங்காரம் செய்தார். அந்தப் பூசகரின் உடம்பு, இருக்கும் எலும்பை எண்ணக்கூடியதாக, மிக மெலிந்து இருந்தது. தொப்பை வயிறும் கிடையாது. எளிமையான வறுமைக்கோலம் அவரின் தோற்றம். ஆனால், பக்தியுடன் மனம்வைத்து தீப தூபம் காட்டி அழகாகப் பூசை செய்தார். நிறைவில் பிரசாதம் தந்தார். அங்கு நின்ற மக்களும் தங்களது பொங்கலில் ஒரு பங்கைத் தரத் தவறவில்லை. அங்கு வழிபாட்டில் இருந்த மக்கள் கூட்டத்தில் எம்மைத் தவிர வேறு தமிழர்கள் எவரும் இல்லை. கோயிலுக்கு அருகே குரங்குக் கூட்டம் கும்மாளம் அடிப்பதையும் கண்டோம்.

சிவன்கோயில் 2 தான் முதன்முதல் பொலன்னறுவையில் ஆம்பிக்கப்பட்டது எனக் கூறுகின்றனர். தமிழ்நாட்டிலிருந்து வந்த அரசர்கள், அரச சபையைச் சேர்ந்தோர், படைவீரர், பணியாட்கள்தான் இக்கோயிலை வழிபட்டனர். மேலும் எந்த நேரமும் ஆட்சியை இழக்கலாம் என்ற எண்ணத்தால் தஞ்சாவூர்க் கோயில் போன்றோ அல்லது வேறு இந்தியக் கோயில்போன்றோ பெரிதாக அமைக்கவில்லை என்று தெரிகிறது. திராவிட முறைப்படி அமைக்கப்பட்ட சிறு கோயில்தான் இந்த ஆலயம்.

## சிவன்கோயில் 1



சிவன்கோயில் 2 இருப்பதால் சிவன்கோயில் 1 இருக்கிறதா என்று வினவ, அது புராதன நகர் நுழைவாயிலுக்கு அருகில் இருப்பதாக அறிந்தோம். எனவே வந்த வழி யிலேயே திரும்பிச் சென்றோம். இவ்வாலயம் பெரிதாகப் பரந்து, ஆனால் சிதைந்த நிலையில் இருந்தது. கற்களாலும் செங்கற்களாலும் கட்டப்பட்டமைதான் காரணமாக இருக்கலாம். மேற்பகுதி செங்கல்லாற் கட்டப்பட்டதால் அது கூரையில்லாத வீடுபோற் காணப்படுகிறது. உள்ளே இருந்தே ஆகாயத்தைப் பார்க்கலாம். ஓரிடத்தில் சூரியனின் ஒளியில் ஒரு சிவ லிங்கத்தைக் கண்டோம். அருகில் சென்று பார்த்தபோது முன்னைய சிவலிங்கம் 2 போலக் கருமையாக முழுமையாக இல்லாமல் கரடு முரடாகத் தோன்றியது. எனினும் மேற்பகுதி பூக்களால் - மல்லிகை மலர்களால் - அழகாக வட்டவடிவமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. கண்டு வியந்து வணங்கினோம்.



அகழ்வு ஆய்வாளர்கள் இக்கோயிலைக் கண்டுபிடித்தபோது இந்துக் கடவுளர்களாகிய பிள்ளையார், நடராஜர், சிவன், பார்வதி போன்ற விக்கிரகங்களைக் கண்டெடுத்தனர். இவையாவும் பொலன்னறுவை Archiological Museum இல் இன்றும் இருக்கின்றன.



## சோழர் அரசாட்சி

புலிக் கொடியையும் புலிச் சின்னத்தையும் கொண்ட சோழர் பழந் தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தருள் ஒருவர். மற்றைய இருவரும் சேரர் பாண்டியர் ஆவர்.

"சோழவளநாடு சோறுடைத்து" என்பது பழமொழி. சோறுடைத்த நாடு என்பது சோறநாடு ஆகிப் பின்னர் சோழநாடு ஆகி யிருக்கலாம். "சொல்" என்பது நெல்லின் மற்றொரு பெயராகும். இதில் 'ல' கரம் 'ழ'கரமாகத் திரிந்து 'சோழ' என வழங்கிற்று என்றும் கூறுவர். பொன்னி என்ற காவேரி நதியும் அதன் கிளைகளுமே முக்கிய அம்சமாகச் சோறுடைத்ததாக்கின.

பண்டைய சோழநாடு தற்காலத் தமிழ்நாட்டின் நாகப்பட்டணம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் பகுதிகளாகும். கிபி 10-12 நூற்றாண்டே சோழநாட்டை மிக வலிமைபெற்ற நீண்டகால ஆட்சியாக்கியது. இந்த ஆட்சி சிறந்து பரந்து வடக்கே ஒரிசாவரையிலும் கிழக்கே யாவா சுமாத்திரா, மலேசியா வரையும் தெற்கே இலங்கை, மாலைதீவு உட்பட விரிந்திருந்தது. இவர்களின் மலர் ஆத்தியாகும்.

இக்காலத்தில் தஞ்சாவூர் தலைநகரமாக இருந்தது. இவர்கள் ஆண்ட காலத்தில் தமிழர்களின் கலை, கலாசாரம், கல்வி, மொழி, இலக்கியம், சமயம் ஆகிய அனைத்தும் மேலோங்கிச் சிறப்பாக இருந்தன. தஞ்சாவூர்க் கோயில் மட்டுமின்றி ஏனைய கோயில்களும் அவர்களின் சமய உணர்வைப் பறை சாற்றுகின்றன. பல நாடுகளை இவர்கள் கைப்பற்றினாலும் ஒரு வரையும் இவர்கள் மதமாற்றம் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களின் வரலாற்றில் முதலாம் இராஜராஜ சோழனும் அவனின் மகனாகிய முதலாம் இராஜேந்திர சோழனும் பெருமைதேடியவர்கள்.

முதலாம் இராஜராஜசோழன் 10ஆம் நூற்றாண்டில் இலங்கையைக் கைப்பற்றி பொலன்னறுவையை முதன்முதலாகத் தலை நகரமாக்கினான். ஜனநாகரம் - (ஜன

நாதமங்கலம்) எனப் பெயரிட்டான். ஒரு பௌத்த விகாரையின் பெயர் இராஜராஜப் பெரும் பள்ளியாகும். இதேபோன்று நாகப் பட்டினத்திலும் ஒரு புத்தவிகாரை அக்காலத்தில் இருந்தது நினைவுகூரப்படவேண்டியது.

## பொலன்னறுவை

பொலன்னறுவை இலங்கையின் வட மத்திய மாகாணத்தில் அநுராதபுரத்துக்கு அடுத்த இரண்டாவது பெரிய நகரமாகும். சோழர்களின் பின்னர், பதினொராம் நூற்றாண்டில் (1070) விஜயபாகு 1 ஆல் பொலன்னறுவை கைப்பற்றப்பட்டது. இதன் பின்னர், பராக்கிரமபாகு (1157-86) அரசாண்டான். பராக்கிமபாகுவின் சகாப்தத்தில் பொலன்னறுவையில் விவசாயம், அழகிய பூங்காக்கள், கட்டடங்கள் ஆகியவை விருத்தி யடைந்தன. தற்போதும் இவனது பெயரால் பராக்கிரம சமுத்திரம் (25 சதுர கிமீ) இருக்கிறது. 13ஆம் நூற்றாண்டில் பொலன்னறுவையின் பின் கொளும்பு தலை நகரமாகியது.

இன்று தற்போதைய ஜனாதிபதியின் ஏற்பாட்டில் மின்சாரம், விவசாயம், கல்வி, சுகாதாரம், தெருக்கள் யாவும் அபிவிருத்தி அடைந்துள்ளன. சுத்தமான நகரமாகவும் பசுமை நிறைந்த சூழல், தங்கும் வசதிகள், பழைய கட்டடங்கள் என பார்க்க அழகாகவும் இந்த இடம் இருக்கிறது. அதனால் பிற நாட்டாரை ஈர்க்கிறது.

## தொடரும் இராய்ச்சியம்

அன்றும் இன்றும் என்றும் இந்த அரசாட்சி இருக்கும். அரசன் ஆண்டாலென்ன ஆண்டி ஆண்டாலென்ன இந்தக் குரங்கு ஆட்சி (Monkey Kingdom) இருக்கும். Disney தயாரிப்பில் 17.04.2015 இல் வெளிவந்த ஆவணப்படம் இதற்குச் சான்று. மூன்று வருடங்களாகப் பொலன்னறுவையில் தங்கி எடுத்த படம் இது. இது சக்கைபோடு போட்டு பல விருதுகளையும் பெற்றது. குரங்குகள் மனிதர்களிலும் பார்க்க நேயம் கொண்டவை என சித்திரிக்கிறது. ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது வாஞ்சையோடு கொஞ்சுவது, அணைப்பது, அழைத்துச் செல்வது ஆகிய காட்சிகளைக் காணலாம். ஒன்றாகக் குளிப்பது, விளையாடுவது யாவற்றையும் பார்த்துப் பரவசமடையலாம்.

Disney குழுவையே பொலன்னறுவை கவர்ந்து வரவழைத்தது என்றால் அதன் பெருமையே பெருமை. அருகில் சிகிரியா, மிகின்தலை ஆகிய இடங்களும் இருப்பதால் பலரும் இங்கு வருகின்றனர்.

புலிக்கொடியுடன் ஆண்ட தமிழரின் பண்டைய இராசதானியைக் காண, அங்கு நாம் செல்லவேண்டும். சிகிரியாவைப் பார்த்து மகிழ மட்டும் போனாற் போதாது. சிவன்கோயில் 2 ஐப் பார்த்தாலே மனம் போதை கொள்ளும். தமிழ்க் கோயிலை அழிக்காமல், அழியாமல் பாதுகாப்பது போற்றத்தக்கது.



இங்கிருந்து 6கிமீ தொலைவில் பொலன்னறுவை நகரம் இருக்கிறது. இங்கு தங்கும் வசதிகள், கடைகள் பல உள. பொலன்னறுவையைக்

கொளும்பிலிருந்து ஆறு மணி (6) நேரத்திலும் கண்டியிலிருந்து மூன்று மணி (3) நேரத்திலும் தம்புல்லையிலிருந்து ஒரு மணி (1) நேரத்திலும் பேருந்துமூலம் அடையலாம்.

# ஒண்ணாமை உணராதேன்

ஞாலக்கோன்



திருநாவுக்கரசரின் சரிதத்தைப் பாடவந்த சேக்கிழார் பெருமான்,

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவல் உறுகின்றேன் பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய **ஒண்ணாமை உணராதேன்**

என்கிறார். தன்னால் இயலாது என்று தன் ஆதங்கத்தை வெளிப்படுத்துகிறார்.

சென்ற மே மாதம் 27ஆம் திகதி நடைபெற்ற திருமதி விசாகா ஹரி அவர்களின் இசை உபந்யாசம் நிகழ்ச்சியைப்பற்றி எழுத முனையும்போது, மேலுள்ள சேக்கிழாரின் அடிகள்தான் மனதில் நினைவுக்கு வருகின்றன. திருநாவுக்கரசர் கோயில்கள்தோறும் சென்று பரமனைப் பரவியதோடு உழவாரத் திருத்தொண்டும் செய்தவர். திருமதி விசாகா அவர்கள் நாடுதோறும் சென்று ஆன்மிகச் சொற்பொழிவுகளைத் தம் இசைத்திறமையுடன் சுவைபடச் சொல்லி மக்கள் மனதைத் திருப்திப்படுத்தும் புனிதசேவையைச் செய்து வருகிறார். ஒரு வழியில் இதுவும் ஒரு தொண்டுதான். அதைப்பற்றிச் சொல்ல ஒண்ணாமையை உணர்கிறேன்.

கீரிமலைச் சிவன்கோயில் திருப்பணி நிதிக்காக ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சி Highgate Hill முருகன் கோயில் மண்டபத்தில் நடைபெற்றது. மண்டபம் நிறைந்த கூட்டம்.

வரவேற்புரை நிகழ்த்திய Dr நவரத்தினம் அவர்கள், "பல நிகழ்வுகள் இன்று நடக்கின்றன. இருந்தாலும் இங்கு பெருமளவில் வந்திருக்கிறீர்கள். இதன் காரணம் நடக்குமிடம் கோயில்

என்பதாலா, நிகழ்ச்சி கோயில் திருப்பணிக்கு என்பதாலா, அல்லது இன்றைய கலைஞர்களின் பெருமையா என அறியேன். கலைஞர்களுக்காகவே வந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்" எனத் தொடங்கித் தன்னுரையை அழகாகவும் சுருக்கமாகவும் நிகழ்த்தினார்.

தற்கால நவீன தொழில்நுட்பத்தால், கீரிமலை நகுலேசுவர சுவாமி திருக்கோயிலின் ஆதீனகர்த்தர் பிரம்மஸ்ரீ நகுலேசுவரக் குருக்களைத் தொலைபேசியில் அழைக்க, அவர் வழங்கிய ஆசி உரையுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. அன்று அவரின் 94ஆவது பிறந்த தினம் என்றும் குறிப்பிட்டார்கள். Dr சிவகுமார் அவர்கள் கலைஞர்களை அறிமுகம் செய்தார். திருமதி விசாகா அவர்களை அறிமுகம் செய்தபோது, "தூக்கும் பனுவல் துறைதோய்ந்த கல்வியும் சொற்சுவை சேர் வாக்கும் உடையவர்; வடமொழியிலும் வல்லவர்" என்று கூறினார். அது மிகவும் பொருத்தமான அறிமுகம் என்பதை நடந்த நிகழ்வில் உறுதிசெய்தார் திருமதி விசாகா அவர்கள்.

சுமார் 50 அல்லது 60 வருடங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் கோயில் திருவிழாக்களில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெறுவது வழக்கம். பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி போன்றவர்கள் சமயச் சொற்பொழிவு ஆற்றுவார்கள். திரு விநாசித்தம்பி என்றொரு ஆசிரியர், சிவஸ்ரீ மணி ஐயர் என இருவரும் இசை உபந்யாசம் செய்வார்கள். இப்போது இந்தக் கலை ஈழத்தில் இன்னும் இருக்கிறதா எனத் தெரியவில்லை. தமிழ்நாட்டில் சிலர் இன்னும் இசையுடன் கூடிய உரைவிருந்து வழங்கிவருகிறார்கள். அவர்களுள் திருமதி விசாகா அவர்கள் பிரபலமானவர்.



அன்றைய தலைப்பு **"முருக வைபவம்"** என்பது. அரைமணி நேர இடை வேளை தவிர, இரண்டுமணி நேரம் வரை நிகழ்ந்த நிகழ்வு அற்புதமானது; மெய்ம்மறக்க வைத்தது. ஒரு கச்சேரி அல்லது ஒரு காலட்சேபம் என்றால் அதைத் தொடங்கும்போது நாட்டை, ஹம்சத்வனி, கௌளை போன்ற இராகங்களிலேதான் தொடங்குவார்கள். ஆனால் அன்று சிந்துபைரவி இராகத்தில் **'அருவமும் உருவுமாகி'** என்ற பாடலுடன் ஆரம்பித்தார் திருமதி விசாகா அவர்கள். தொடர்ந்து மாயூரம் விஸ்வநாதையர் பாடலான **'காந்தமாம் கதிர்காமந்தன்னில்'** என்ற பாடலைப் பாடினார்கள். ஆரம்பமே அற்புதமாக இருந்தது. ஒரு நல்ல ஆசிரியர் பாடம் நடத்தும்போது பாடத்துக்குள் மட்டும் நிற்காது, அதற்கு ஏற்றதான வேறு பாடல்கள், கதைகள், கருத்துக்கள், ஒற்றுமை வேற்றுமைகள் என்று பலவற்றைக் கொண்டுவந்து பாடத்தைச் சுவைபட நடத்துவார். அதுபோலவே இவரும் பல புராணக் கதைகள், வடமொழிச் சுலோகங்கள், தமிழ்ப் பாடல்கள் என்பவற்றைக் கலந்து ஓர் அமிர்தம் படைத்தார்.

முருகனின் பெயர்கள் பற்றிக் குறிப்பிடும்போது அவை காரணப் பெயர்கள் என்று கூறி, குமரன் - குழந்தை, குகன் - வேடுவன் போலக் குகைகளில் (அன்பர்களின் மனக் குகைகளில்) வசிப்பவன், காங்கேயன் - கங்கை நதிமூலம் (நெருப்புப் பொறியாக) வந்தவன், ஷண்முகன் - ஆறு திருமுகங்களை உடையவன், முருகன் - அழகன், கார்த்திகேயன் - கார்த்திகை நட்சத்திரத்தில் தோன்றியவன் என்று பல உதாரணங்களைக் குறிப்பிட்டார். முருகனின் தோற்றம், மாம்பழத்தைப் பெறாததால் பழனிக்குப்போனது, தாரகாசுர வதம், பிரணவ மந்திரத்தின் பொருள் தெரியாதென்ற பிரம்மாவைத் தண்டித்தது, சூரபன்மனை ஆட்கொண்டது, தெய்வயானை, வள்ளி

திருமணம் என்ற புராணக் கதைகளோடு குமரகுருபரர், முத்துசுவாமி தீட்சிதர் ஆகியோருக்கு அருளிய வரலாறுகளையும் விவரித்தார்கள். வள்ளி திருமணம் கச்சியப்ப சிவாசாரியார் அருளிய கந்தபுராணத்திலே இருக்கிறது. வடமொழியில் உள்ள ஸ்காந்த புராணத்தில் (ஒரு இலட்சம் சுலோகங்கள்) இல்லை என்ற விவரத்தையும் சொன்னார்கள்.

பேசும்போது பொருத்தமான பாடல்களைப் பாடியதும் சுவையாகவே இருந்தது. முருகனின் காரணப் பெயர்களைக் குறிப்பிடும்போது பாபநாசம் சிவனின் தோடி இராகப் பாடலான கார்த்திகேய காங்கேய கௌரி தனயா பாடினார். தேவர்கள் சூரனின் கொடுமை தாங்காது சென்று முறையிட்ட இடத்தில் சிதம்பரபாரதி பாடலான மாமயூர மீதிலேறி வா என்ற பிலஹரி இராகப் பாடல் வந்தது. முருகனின் வீரத்தைப் பரீட்சித்தபின் தேவசேனாதிபதி பதவியை முருகன் பெற்றார் என்ற இடத்தில் நடபைரவி இராகத்தில் ஸ்ரீ வல்லி தேவசேனாபதே என்ற பாடல் பாடி னார். பாபநாசம் சிவன் பல தமிழ்ப் பாடல்களைப் பாடியுள்ளார். ஆனால் இது வடமொழியில் அமைந்த பாடல் என்ற குறிப்பையும் தெரிவித்தார். மாம்பழத்தைப் பெறாமல் கோபத்துடன் பழனி போன சந்தர்ப்பத்தில் வராளி இராகத்திலமைந்த வா வா வா கந்தா வா வா என்ற பாடல் வந்தது.

கறிக்குத் தாளிதம் போலக் கதைக்கு நகைச்சுவை - கருத்தோடு ஒன்றிய நகைச் சுவை இன்றியமையாதது. அன்றும் அதற்குக் குறைவில்லை. உதாரணத்துக்கு ஒன்று: முருகனின் பெயர்களைக் குறிப்பிடும்போது, பழைய காலத்தில் பிள்ளைகளுக்கு இறைவன் பெயர் வைப்பார்கள், அனால் இப்போது ஷூஷூ என்று பெயர் வைக்கிறார்கள். வாயிலும் நுழையாது; பொருளும் இருக்காது என்றார்.

துஜாவந்தி இராகத்தில் குமர குருபர என்ற அருணகிரியின் திருப்புகழ் பாடல், பேஹாக் இராகத்தில் முருகனின் மறுபெயர் அழகு என்ற குரு சுரஜானந்தா பாடல், சாவேரியில் முருகா முருகா என்றால் என்ற பெரியசாமி தூரன் பாடல், பிருந்தாவனி இராகத்தில் கலியுகவரதன் என்ற பெரியசாமி தூரன் பாடல், ஹமீர் கல்யாணியில் ஐங்கரனை ஒத்த என்ற அருணகிரி திருப்புகழ் ஆகியவை நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டிய பாடல்கள். இசைப் பிரியர்கள் திரு லால்குடி ஜயராமன் அவர்களின் வயலினைக் கேட்கும்போது பாடுவதுபோல இருக்கிறது என்பார்கள். திருமதி விசாகா அவர்களின் பாட்டைக் கேட்கும்போது லால்குடியாரின் வயலின் போல இருந்தது, பாவம் குழைகிறது. அவரின் மாணவிதானே இவர்.

Dr திருமதி யோத்சனா ஸ்ரீகாந்த் - வயலின், Dr அபிராம் சகாதேவன் - மிருதங்கம், Dr புஜந்தன் சிவகுருநாதன் - கஞ்சிரா, திரு கந்தையா சிதம்பரநாதன் - மோர்சிங் ஆகியோரின் பக்கவாத்திய இசை நிகழ்ச்சிக்கு மெருகூட்டியது. திருமதி யோத்சனா அநுசரணையாக வாசித்தார். அபிராமின் மிருதங்கத்தில் - ஸ்ரீ வல்லி தேவசேனாபதே என்ற பாடலில், மா மவசதா என்ற வரிகள் வரும்போது ஒரு குமுக்கா சத்தம் கேட்டு ஆஹா போடவைத்தது. பாட்டுக்கு மிக அழகாக வாசிக்கிறார். எங்கே அழுத்தவேண்டும், எங்கே ஒலியைக் குறைத்து வாசிக்கவேண்டும் என்பதெல்லாம் அவர் வாசிப்பில் அத்துபடி. புஜந்தன், சிதம்பரநாதன் இருவரும் அவருடன் அருகிலேயே அவர் ஓடும் இடத்தில் ஓடியும் நடக்கும் இடத்தில் நடந்தும் சென்றார்கள். உப பக்கவாத்தியம் வாசிக்கும் இலக்கணமும் அதுதான். முருகா முருகா என்றால் என்ற கீர்த் தனையில் மிஸ்ரசாப்பு தாளத்தில் ஒரு குறுகிய தனி ஆவர்த்தனம் மூன்று நிமிடத்தில் மூவருமாக ஜமாய்த்துவிட்டார்கள்.

நிறைவானதொரு நிகழ்வைப் பார்த்த, கேட்ட நிறைவுடன் வீடு திரும்பினோம்.

**Photo - Courtsey Jaylux Digital**

# சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர்....

திருமதி சுகந்தி இந்துசேகரன்

உலகில் உள்ள சமயங்களில் அநாதியானது சைவசமயமாகும். எல்லாச் சமயங்களும் கடவுள் ஒருவர் இருக்கிறார்; அவர் எங்கும் நிறைந்திருக்கிறார்; ஆதி அந்தம் இல்லாதவர்; அவர் சர்வ வல்லமை உடையவர் என்றும் கூறுகின்றன. அத்தகைய பரம்பொருளை இடையறாது வணங்கி ஆன்ம ஈடேற்றத்தைப் பெற்றவர் பலர். அவர்கள், சிறந்த ஒழுக்கம் உடையவர்கள். அறிவாளிகள். பஞ்சமா பாதகங்களை வெறுப்பவர்கள். அன்புமிக்கவர்கள். ஜீவகாருண்யம் உடையவர்கள். உண்மை பேசுபவர்கள். பொறுமை என்னும் நற்பண்பு உடையவர்கள். எப் பொழுதும் சிவன் நாமத்தையே ஓதுபவர்கள். இறைவனுடைய திருவிளையாடல்களை அநுபவித்து உணர்ந்தவர்கள். மண் ஆசை, பெண் ஆசை, பொன் ஆசை என்பவற்றை துறந்தவர்கள். ஓட்டையும் செம்பொன்னையும் ஒன்றெனக் காண்பவர்கள். இத்தகைய அடியார்களையே "நாயன்மார்கள்" எனப் பெரியபுராணம் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது.

மனிதப்பிறவி எடுத்த ஒவ்வொருவரும் செய்தற்கரிய செயல்களுட் சிறந்தது இறைவன் இடத்தில் அன்பு செலுத்துவதேயாகும். மற்றைய செயல்களெல்லாம் நிலையற்றவை. பழிபாவங்களுக்கு காரணமானவை. எனவே, இறைவனை வணங்குவதே நிலையான பேரின்ப வாழ்வுக்கு வழிகாட்டுகிறது என்றுணர்ந்த அடியார்கள் இறைவன் மேல் பக்தி கொண்டு இறைவனைப் போற்றிப் பாடி உள்ளனர். இந்த அடியார்களுள் முதன்மையானவர்கள் நால்வர். தேவார முதலிகளுள் இளையவரான திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் இறைவனுடன் பிள்ளை அன்பு உறவு கொண்டு வாழ்ந்தார். இவர் இறைவன் மேல் பாடிய பாடல் தொகுப்பு **"திருக்கடைக்காப்பு"** எனப்படுகிறது. திருநாவுக்கரசு நாயனார் - தொண்டுள்ளம் கொண்டு அன்பின் நிமித்தம் பின்தொடர்ந்து அடிமை உறவோடு வாழ்ந்தார். இவர் இறைவன் மேல் பாடிய பாடல் களின் தொகுப்பு **"தேவாரம்"** எனப்படுகிறது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் - இறைவனுடன் தோழமை கொண்டு உரிமையுடன் அன்புறவாடலை வளர்த்து வாழ்ந்து வந்தார். இவர் இறைவன் மேல் பாடிய பாடல்களின் தொகுப்பு **"திருப்பாட்டு"** எனப்படுகிறது. மாணிக்கவாசகர் - இறைவனையே குருவாகப் பெற்று, ஞானத்தல் நீயாகவே என்னை மாற்று என்ற கொள்கையுடன் வாழ்ந்து வந்தார்.

இறைவன் அன்பே வடிவானவன். அன்பெனும் வலையில் அகப்படுபவன் இறைவன். இப்பேரன்பை உணர்ந்தத் திருவாதவூரர் எனும் மாணிக்கவாசகப் பெருமான் தனது இறை அநுபவத்தின் பிழிவாகவே தேனமுதத் தமிழால் திருவாசகத்தைப் பாடியருளினார். தோத்திரத்திலே சிறந்தது "திருவாசகம்", சாத்திரத்திலே சிறந்தது "திருமந்திரம்" என்பது இராமலிங்க வள்ளலார் வாக்கு. திருவாசகத்தின் மனதை உருக்கும் தமிழ், தொட்டாரைச் சிவமாக்கும் தன்மை உடையது. திருவாசகத்தின் முதற் பகுதியான சிவபுராணத்தின் 17ஆவது வரியில், **"சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால் அவனருளாலே அவன் தாள் வணங்கி"**என்று பாடியுள்ளார் மணிவாசகர். அஃதாவது, என் சிந்தையுள் உன் நினைவு உண்டாவதற்கும் உனது அருள் வேண்டும். உனது அருள் இருந்தால் மட்டுமே உன்னை நான் வணங்க முடியும் என்று அழுது அழுது தன் அனுபவத்தைப் பாடுகிறார்.

உலக மாயையில் சிக்கித் தவிக்கும் மனிதர்கள் உலகில் உள்ள பொருள்களின் வழியாக அநுபவிக்கும் இன்பத்தைச் "சிற்றின்பம்" என்பர். ஆனால் என்றென்றும் நிலைபெற்று இடையறாது அநுபவிக்கத்தக்க இன்பம் ஒன்று உண்டு. அதுவே "பேரின்பம்" எனப்படும். மரணத்தின் ஒத்திகையே தூக்கம். இதனையே

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. அதுபோலவே, பேரின்பத்தின் ஒத்திகையே சிற்றின்பம் என்றால் மிகையாகாது. ஆன்மா இப்பேரின்பத்தை உணர்வதற்கு பரிநிர்வாணப்பட வேண்டும். அப்பொழுதுதான் இறைசக்தியை உணரமுடியும்.

இங்கு பட்டினத்தார் பாடல் ஒன்றைக் குறிப்பிடுவது சாலப் பொருந்தும்:

அட்டாங்க யோகமும் ஆதாரம் ஆறும் அவத்தை ஐந்தும்
விட்டேறிப்போன விழிதனிலே வியப்பொன்று கண்டேன்
வட்டாகிச் செம்மதில் பாலூற உண்டு
எட்டாத பேரின்பம் என்னை விழுங்கியது

என்பது அப்பாடல்.

மனதினை அடக்கி ஜீவனில் ஒடுங்கி நின்றால் மட்டுமே பேரின்பத்தை உணரமுடியும்; உலக இன்பத்திலிருந்து விடுபட்டால் இறைவன் திருவடிநிழலை அடையலாம் என்கிறார் பட்டினத்தடிகள்.

சந்தனம் அரைத்தால் மணக்கும்; கரும்பு சுவைத்தால் இனிக்கும். ஆனால் திருவாசகம் தொட்டாரை (மனமுருகிப் படிப்பாரை) சிவமாகவே ஆக்கிவிடும் தன்மையுடையது. **"திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்"** என்பது வாக்கு. திருவாசகத்தைக் கற்றுணர்ந்த வள்ளலார் பின்வரும் பாடல்கள் மூலம் அதன் சிறப்பினைத் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார்:

***பாடல் -1***

வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

***பாடல் -2***

வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தைக்
கேட்டபொழுது அங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் எனிலிங்கு நானடைதல் வியப்பன்றே!

மாணிக்கவாசகர் அழுது அழுது சிவமே ஆகிவிட்டார். சிவபுராணத்தின் 60ஆவதுவரியில்

"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே....."

என்கிறார். நாயைவிடக் கீழான எனக்குத் தாயினும் சிறப்பான கருணை காட்டி என்னை நீ தடுத்தாட்கொண்ட பரம்பொருளே என்று அநுபவித்துப் பாடியுள்ளார் மணிவாசகர்.

"பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன் (நாயேன்)" என்கிறார். "எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான் மெய்யே! உன்

பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்". "நான் எல்லாவிதமான பிறவிகளையும் எடுத்து எனது மனம் சொல்லுவதையெல்லாம் செய்து இளைத்துவிட்டேன். மெய்யே! (என்றும் நிலையான உண்மைப் பேரொளியே) நீ என் தலை மேல் உன் திருவடியை வைத்தாய். உன் பொற்பாதங்களைக் கண்டு இன்று நான் வீடு பேறு பெற்றேன்" என்கிறார். வாழும்போதே முத்தி அடைதல் என்பது சாதாரண மனிதரால் அடைய முடியாது. சீவன் முத்தர்களாகிய அடியார்களால் மட்டுமே சத்தியப் பரம்பொருளை உணரமுடியும். மாணிக்கவாசகர் சீவன்முத்தியடைந்த நிலையில் இதனை அநுபவித்து உணர்ந்து கொண்டார்.

கண்ணப்பனின் அன்புக்கு நிகராக உன்னிடம் நான் அன்பு செலுத்த முடியவில்லையே என்று நான் உணர்ந்து கொண்டபோதிலும், என்னையும் ஒருவனாக ஏற்றுக் கொண்டு எனை ஆட்கொண்டருளினாய் இறைவா! என்று அழுது அழுது உளம் உருகப் பாடினார்.

யானே பொய் என் நெஞ்சும்
பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந் துறுமாறே!

- திருவாசகம் - ஆனந்தப் பரவசம் 10வது பாடல் -

நான் அழவேண்டும். உன்னைத் தொழ வேண்டும். பொய்மையாகிய நானும் மெய்ம்மையாகிய நீயும் ஒன்றாக முடியுமா? என்கிறார் வாதவூரர்.

இவருடைய பாடல்களில் மயங்கிய ஈசன் "பாவை பாடிய வாயால் கோவை பாடுவாயாக" எனப் பணித்தார். இறுதியில், தானே வந்தருளி, எழுதி, சிற்றம்பலமுடையான் எனக் கையெழுத்திட்டார்.

திருவாசகத்தைப் பொருளுணர்ந்து ஓதினால் கருங்கல்லும் கரையும். இன்பம் பெருகும். உள்ளம் ஒன்று படும். அக இருள் அகலும். துன்பம் நீங்கும். அன்பு ஜோதியாய் திகழும். கண்ணீர் சொட்டும். உள்ளம் நெகிழும். பொருள் உணர்ந்த உள்ளம்தான் பரம்பொருளோடு கூடும். இவ்வாறாக உளமாரத் துதிப்பவர்களின் அன்பை இறைவன் ஏற்று எல்லோரும் துதிக்க, "சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார் செல்வர்"; இறைவனின் பாதார விந்தங்களைச் சென்றடைவர்.

## தரிசிக்க முக்தி தரும் தலம் சிதம்பரம்


**போற்றுமஞ் செழுத்தி நீறும் புவிமிசை விளங்கத் துன்ப**
**மாற்றிடும் சைவ ஞான வாசகம் புகல வந்தார்**
**சீற்றமில் புலியும் பாம்பும் சீர்பெற விளங்கு மன்றி**
**லேற்றினன் புலியூர் மேலைச் சிவபதம் என்று கண்டார்.**

- திருவாதவூரடிகள் புராணம்

பிறவித் துன்பத்தை நீக்கவல்ல திருவாசகத்தை அருளிய மணிவாசகர், சிவபத்தை அடைய ஏதுவான இடம் புலியூர் (சிதம்பரம்) என்று கருதி அத் தலத்தைச் சென்றடைந்தார்.

# Periya Puranam for the Common Reader

## நூலாய்வு - சைவப்புலவர் க சிவானந்தன்




“தாயினும் நல்ல தலைவர்” என்று அடியார்களாற் போற்றப்படுகின்ற முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானைத் தமது இதயக் கமலங்களிலே நேசித்தும் பூசித்தும் வாழ்ந்து, சிவபெருமானுக்கும் சிவனடியார்களுக்கும் சிவாலயங்களுக்கும் அருந்தொண்டாற்றிய பக்தர்களின் தொகை பல்லாயிரமாம். அவர்களுள் (ஏறத்தாழ) எட்டாம் நூற்றாண்டுக்கு முன்னர் வாழ்ந்த 63 தனி அடியார்களினதும் 9 தொகையடியார்களினதும் திவ்விய வரலாறுகளைப் பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டத் தித்திக்கும் தீந்தமிழ்க் காப்பியமாகத் தீட்டித் தருவது “பெரியபுராணம்” என்று குறிப்பிடப்படும் திருத்தொண்டர் புராணமாகும்.

இறைவனையே பற்றுக்கோடாக் கொண்டு வாழ்ந்த இவ்வடியார்கள் பலர் தமது வாழ்க்கையிலே அநுபவித்த இன்னல்கள் பல. இறைவனாலேயே பற்பல சோதனைகளுக்கு ஆட்படுத்தப்பட்ட போதிலும் அவற்றையெல்லாம் தமது பத்தியின் உறுதியினாலும் இறைவன் பெருங்கருணையினாலும் தாண்டி இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட பெருமைக்கு உரியவர்களான இவர்களை “நாயன்மார்கள்” என்று அன்போடு போற்றிச் சைவத்தமிழ் முன்னோர்கள் கௌரவித்து வந்துள்ளார்கள். தனிப்பெருமையுடன் இலங்குகின்ற சேக்கிழார் பெருமான் அருளிய பெரியபுராணத்தின் இலக்கிய வண்மையும் அடியார்களின் பக்தித் திண்மையும் தமிழர்கள் மத்தியில் மட்டுமல்லாது மற்றைய மொழி பேசுவோர் மத்தியிலும் அறியப்படவேண்டும் என்ற வேணவாவுடன் பெரியபுராணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்கள் பலர். சமீபத்திலே, இந்த வரிசையில் வெளிவந்த, "Periya Puranam for the Common Reader" என்ற நூலைக் குறித்து ஓர் அறிமுகத்தினை இங்கே எழுத விழைகிறேன்.

இந்த ஆங்கில நூலை யாத்தவர் தமிழ்கூறும் நல்லுலகுக்கு நன்கு அறிமுகமான தமிழ் அறிஞரும் வழக்கறிஞருமான செல்லத்தம்பி சிறீக்கந்தராசா அவர்கள் ஆவர். பெரிய புராணத்தை அதே வரிசையில் மொழி பெயர்ப்புச் செய்யாமல் அதிலேயுள்ள 63 தனியடியார்களுடைய கதைகளை மட்டும் அழகிய நடையுடன் கூடியதும் வாசிக்கின்றபோது இன்பம் அளிக்கின்றதுமான ஆங்கிலத்தில் பல்லோர்க்கும் பயன் விளைக்குமாறு நூலா

சிரியர் கூறிச்செல்லும் திறன் பாராட்டத்தக்கது. சுந்தரரைக் கதாநாயகனாக உருவகித்துத் திருத்தொண்டத் தொகையிலே சுந்தரர் கூறிய வரன்முறை மாறாமல் சேக்கிழார் தனது பெரியபுராணத்தை விரித்துச்செல்கிறார். இந்த நூலாசிரியர் அந்த உத்தியைக் கையாளாது, 63 அடியார்களது வரலாற்றையும் (பெருமளவுக்கு) ஆங்கில அகரவரிசைப்படி சொல்லிச் செல்கிறார். ஓர் அடியாரது பெயரைக் கொண்டு விரைந்து அந்த அடியாருடைய வரலாற்றுக்குச் செல்ல உதவும் இந்த வரிசை, நூலின் உள்ளடக்கத்தில் (contents) தரப்பட்டுள்ளது.

சேக்கிழார் பெருமான் தந்த தகவல்களை நூலாசிரியர் மேலும் நுனித்து நோக்கி, சேக்கிழார் கூறாமல் விட்ட ஓரிரு தகவல்களையும் ஆதாரத்துடன் எடுத்துரைப்பது நூலாசிரியரின் ஆராய்ச்சித் திறனுக்குச் சான்றாகின்றது. குறிப்பாக ஏயர்கோன் வரலாற்றில் அவர் இறைவனிடம், "மழை தருக! நான் பன்னிரண்டு வேலி நிலத்தைக் கொடையாக வழங்குகிறேன்" என்று வேண்டிய செய்தி பெரியபுராணத்தில் இல்லை. சுந்தரர் பாடிய தேவாரங்கள் (தேவாரம் 7785, 7786) "வையகமுற்றும் மாமழை மறந்து வயலில் நீர்இலை மாநிலம் தருகோம்" என்றும் "ஏதம் நன்னிலம் ஈரறுவேலி ஏயர்கோனுற்ற இரும்பிணி தவிர்த்து" என்றும் கூறுகின்ற சேதியை நூலாசிரியர் எடுத்துரைக்கின்றபோது நான் அடைந்த ஆனந்தம் மிகப்பெரிது. இதேபோலவே இளையான்குடி மாற நாயனார் வாழ்ந்த ஊராகிய இளையான்குடி பாண்டி நாட்டிலுள்ள பரமக்குடி மாவட்டத்திலுள்ள இளையான்குடியே என்று "சேக்கிழார் அடிச்சுவட்டில்" என்ற நூலின் ஆசிரியர் திரு சோ சிவபாதசுந்தரம் அவர்கள் திட்டவட்டமாக கூறுவதைப் பதிவு செய்கிறார் நூலாசிரியர். இவருடைய தேடல் சேக்கிழாரைக் கடந்து மற்றைய ஆதாரங்களையும் பரிசோதித்துள்ளமையைப் புலப்படுத்துகின்றது இந்தப் பதிவு.

நூலாசிரியர் ஒரு வழக்கறிஞர் ஆதலாலே ஆங்காங்கே சில சம்பவங்களுக்கு ஆங்கிலச் சட்ட அடிப்படையில் விளக்கமும் தெளிவும் எடுத்துரைக்கிறார். பேராசிரியர் மருதநாயகம் அவர்கள் இந்நூலுக்கு வழங்கியுள்ள பன்னிரண்டு பக்க முன்னுரை அறிஞர்களுக்குப் பெருவிருந்தாக அமைகின்றது. மிக நேர்த்தியான முறையில் கையடக்கமாக 372 பக்கங்களில் பெரியபுராணக் கதைகளைச் சுவைபட வர்ணிக்கின்ற இந்நூல் தரமான முறையில் "ராம் லட்சுமி" அறக்கட்டளையினரால் பதிக்கப்பெற்றிருக்கின்றது. ஆங்கிலம் அறிந்த இளைஞர்களும் பெரியோர்களும் தடங்கல் இல்லாமல் வாசித்து இன்புறவும் எங்கள் சமயநெறியில் உறுதியுடன் தொடர்ந்து ஒழுகவும் இந்நூல் பெருந்துணை புரியும் என்பதற்கு ஐயமில்லை.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

***நூலின் பிரதிகள் பெற:***
***திரு வ இ இராமநாதன் -01268 766624***
***திரு செ சிறீக்கந்தராசா - 020 8590 9905***

## கலசம் 100

***அன்புக்குரிய கலசம் வாசகர்களே!***

**கலசத்தின் நூறாவது இதழ் 2021 ஜனவரி மாதம் 14ஆம் திகதி இறைவன் திருவருளால் அதிக பக்கங்களுடன் வெளிவரவுள்ளது. அந்த நிகழ்வைக் கொண்டாடும் விதமாக, வாசகர்களுக்கு ஒரு கட்டுரைப்போட்டி நடத்தவெனக் கலசம் ஆசிரியர் குழு தீர்மானித்துள்ளது. கட்டுரைத் தலைப்புக்கள், போட்டியிடுவோர்க்கான தகுதிகள், பரிசுத் தொகை போன்ற விவரங்கள் எதிர்வரும் இதழ்களில் வெளிவரும் என்பதை மகிச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.**

**- கலசம் ஆசிரியர் குழு**

## சைவ முன்னேற்றச் சங்கத்தின் நால்வர் கலை நிலையம் 04.05.2019










## சைவ முன்னேற்றச் சங்க முதியோர் நிலையத்தின் மாலை மாருதம் 15.06.2019










Banana Leaf
taste with tradition
அனைத்து விழாக்களுக்கும் உணவு,
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
Tel: 020 8554 4120
Mob: 07969 972 202
Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com
4 Central Parade, Ley Street, Ilford , Essex IG2 7DE
We do cater for :
Wedding
Puberty Ceremony
Birthday &
Arangetram Etc.


Veena's
CASH & CARRY
Quality! Variety!! Satisfaction!!!
Worldwide money transfer
bureau de change
FRESH FRUITS & VEGETABLES
FROZEN FOODS
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com



சிவயோகம்

**SIVAYOGAM**

# இந்துக் கலாசார மையம்

**128, Aurelia Road, Croydon CRO 3BF**
**Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333**
**Email: sivashakthy@sivayogam.co.uk**





**குறைடனில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் மூலஸ்தானம்**

அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மனை ப் பிரார்த்திக்கின்றோ ம். அம்பாளின் அருளாலும், அடியவர்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்குத் திருக்கோயில் அமைக்கும் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் திருப்பணியை விரைவாக நிறைவேற்றுவதற்கு தங்களுடைய ஒத்துழைப்பை நல்குமாறு மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம். வங்கிக் கணக்கு விபரம்

Name :- SIVAYOGAM BUILDING FUND

Account No. :- 20057541

Sort Code :- 20 21 78

Bank :- BARCLAYS BANK

நன்றி

அறங்காவலர் சபையினர்


Lycamobile
4G LTE
Out of this world data...
20GB
Unlimited UK minutes
Unlimited UK texts
Just £10*
for the first month
£20/30 days thereafter.
...with UK Plan Mega
lycamobile.co.uk
0207 132 0322
*New customers only.
When purchased online.

# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

Orchid Bungalow
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

Jasmine Bungalow
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
Adult Services 01708 856592

Trinity Community Centre
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SEISHINKAN
GOSHIN · ISSHINRYU KARATE
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Michael Calandra
8th Dan, Kyoshi-Go
Isshin-Ryu Karate - Do
NEW YORK - USA
Tel: 001 917 667 0739
Email: oikddojo@aol.com
www.isshinryukarate.com
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139
M Ramathas
4th Dan
Isshin-Ryu Karate - Do
LONDON - UK
0044 07958 010 139
Email: goshinissinryukarate@gmail.com
www.goshinisshinryukarate.com



"Ammanai Saran Addinthal Athika Varam Peralam"

SRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST

Founded on 10.08.1991 Charity No. 1014409

5 Chapel Road London W13 9AE,
Tel: 020 8810 0835/ 020 8840 0485
www.ammanealing.org Email: info@ammanealing.org

# தியான மண்டபம்



## அம்பிகைக்கு ஓர் மண்டபம் அமைத்திடுவோம் வாரீர் !

**6000 சதுர அடியில் மூன்று தளங்களைக் கொண்டு அமையும் தியான மண்டபம் ஒவ்வொருவரும் இணைந்திட ஒரு சதுர அடிக்கு £180 பவுண்களே. அம்பிகையின் அருட்கடாட்சத்திற்கு ஆளாகுங்கள்.**

கடந்த 14.07.2018 அன்று அழகுற அமையப் போகும் தியான மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற துர்கை அடியார்கள் அனைவரும் தங்களால் முடிந்த நன்கொடையை வழங்கி உதவுங்கள்!

சிறுதுளி பெரு வெள்ளம்

Please Extend your support to build our Meditation Hall
your Magnanimity will enable us to build
the Three Story 6000 Squate Feet Meditation Hall.
Sponsorship of £180 for a Square feet.

Bank Details: SKTA Temple Trust
LLOYDS Bank, Sort Code: 30-98-91| Account No: 02717646

**அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்!**

*Please Donate as much as you can!*

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

**ஜூலை (17-07-2019) தொடக்கம் ஒக்டோபர் (27-10-2019) வரை**

| | | |
|---|---|---|
| 17.07.2019 | புதன் | ஆடிப்பிறப்பு |
| 31.07.2019 | புதன் | ஆடி அமாவாசை |
| 07.08.2019 | புதன் | சுந்தரர் குருபூசை |
| 02.09.2019 | திங்கள் | ஆவணி சதுர்த்தி |
| 12.09.2019 | வியாழன் | நடேசர் அபிஷேகம் (மாலை) |
| 29.09.2019 | ஞாயிறு | நவராத்திரி விரத ஆரம்பம் |
| 06.10.2019 | ஞாயிறு | சரஸ்வதி பூசை |
| 07.10.2019 | திங்கள் | விஜயதசமி |
| 07.10.2019 | திங்கள் | கேதாரகௌரி விரதாரம்பம் |
| 12.10.2019 | சனி | நடேசர் அபிஷேகம் (மாலை) |
| 27.10.2019 | ஞாயிறு | தீபாவளி, கௌரிவிரதம் பூர்த்தி |

**கோயில் திறந்திருக்கும் நேரம்:**

காலை: 8.30 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை: 5.00 மணிமுதல் 9.00 மணிவரை

அன்பர்கள் அனைவரும் வந்து, ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேசுவரப் பெருமானை வழிபட்டுத், திருவருள் பெற்று உய்யுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*
2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | |
|---|---|---|---|
| Title | | Home Phone | |
| First Name | | Mobile No | |
| Surname | | Email ID | |
| Address | | Membership | ☐ Annual £15.00 ☐ Life £150.00 |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK) Lloyds Bank A/c Number : 00373079 Sort Code : 30-90-80 | |
| Post code | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ............................ Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |

| | | |
|---|---|---|
| President | Hon. General Secretary | Membership Secretary |

# நாரதர் கலகம்

**வை.சிவனருட்செல்வன்**

நாரதர் என்றவுடன் எல்லோருக்கும் அவர் ஒரு கலகக்காரன் என்றுதான் தோன்றும். பிள்ளையையும் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டுவார் என்றும் சொல்வர். ஆனால் அவருடைய "கலகம் பிறந்தால்தான் நியாயம் பிறக்கும்" என்ற கொள்கையை அவர் பல தடவைகளில் தம்முடைய கலகங்கள் மூலம் தெளிவுபடுத்தி விடுவார். மாங்கனியைக் கொடுத்துச் சிவனிடமே கலகமூட்டியதைப் போலப் பாரிஜாத மலரைச் சீதேவியிடம் கொடுத்துக் கலகமூட்டிய ஒரு புராணக் கதையைப் பார்ப்போம்.

பூலோகத்தில் பாரம் கூடி அதைச் சமநிலைக்கு கொண்டு வருவதற்காக திருமாலுடைடைய அவதாரமாகக் கண்ணபிரான் அவதரித்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. பூலோகத்தில் துவாரகாபுரியில் கண்ணபிரான் வாழ்ந்து வந்தபோது, அவருக்கு இரு மனைவியர்கள் இருந்தார்கள். உருக்குமணி அம்மையாரும் சத்தியபாமா அம்மையாருமே அவர்கள். இவர்கள் இருவரையும் சீதேவி, பூதேவியின் அம்சங்கள் என்று கூறுவார்கள்.

வீணையுடன் சதாகாலமும் காணப்படும் நாரதமுனிவர் ஏழு உலகங்களுக்கும் தான் நினைத்தபோதெல்லாம் சுற்றிவரும் வல்லமை பெற்றவர். ஒரு நாள் இந்திரலோகம் சென்று அங்கு இந்திரனைச் சுகம் விசாரித்துவிட்டு வரும்போது, அங்கேயிருந்த பாரிஜாதமலரால் தொடுக்கப்பட்ட ஒரு மாலையைக் கண்டார். அதனை எடுத்துக்கொண்டு பூலோக நகரமான துவாரகையை அடைந்து கண்ணபிரானிடம் அந்த மாலையைக் கொடுத்தார். கண்ணபிரான் அப்பாரிஜாத மலர்மாலையை உடனேயே தன்னருகில் இருந்த மனைவியாகிய உருக்குமணியிடம் கொடுத்தார்.

அன்று மாலை, உருக்குமணி அம்மையாரைக் காணவந்த சத்யபாமா தேவலோகத்தில் மட்டுமே இருக்கும் பாரிஜாத மாலையை உருக்குமணி அம்மையார் அணிந்திருப்பதைக் கண்டார். மாலையின் அழகும், அதிலிருந்து வந்த வாசனைமிக்க நறுமணமும் சத்தியபாமாவின் மனதை வருட, "இது என்ன? இந்த மாலை மிகவும் அழகாக இருக்கிறதே! இம்மலர்மாலை உனக்கு எவ்வாறு கிடைத்து?" என வினவ, "இது இந்திரனுடைய நந்தவனத்தில் உள்ள பாரிஜாத மலர்களினால் உருவாக்கப்பட்ட மலர்மாலை. இதை அணிந்து கொள்பவர் என்றும் இளமை குன்றாது இருப்பர். இம்மாலையை இன்று பகவானாகிய கண்ணபிரான் எனக்கு அணிவித்தார்" என உருக்குமணி அம்மையார் கூறினார்.

இதைக்கேட்டு மிகவும் கவலைப்பட்ட சத்தியபாமா, தன் இல்லம் புகுந்து மிகவும் கவலையடைந்து, நிலத்தில் வீழ்ந்து தன்னுடைய அணிகலன்கள் அனைத்தையும் களைந்து நிலத்தில் அவைகளை வீசியெறிந்து கண்ணீர்விட்டு அழுது புரண்டு அரற்றிக் கொண்டிருந்தார்.

கலகக்காரரான நாரதர் அவ்வழியாக வந்தபோது, சத்தியபாவைக் கண்டு ஒன்றும் தெரியாதவர்போல நடித்து, "அம்மணியாரே! உமக்கு நேர்ந்த துன்பம் யாது?" என வினவ, சத்தியபாமா நாரதமுனிவரைத் தொழுது, "சுவாமி! நான் அந்த மாயவனுக்குப் பிரிய மானவளாயிருந்தால் எனக்கல்லவோ அந்த மலர்மாலையைத் தந்திருக்க வேண்டும். கிருஷ்ணருக்கு கொஞ்சுவதற்கும் கூடிக்குலாவுவதற்கும் மட்டும் நான் சத்தியபாமா வேண்டும்; கொடுப்பதற்கும் அடுப்பதற்கும் உருக்குமணி வேண்டும். இது என்ன அநியாயமாக

இருக்கிறது? நரகாசுரனை அழிப்பதற்கு தேரோட்டியாக இருந்து வெற்றிபெறச் செய்த நன்றியைக்கூட மாயவன் நினைக்கவில்லையே! இதை என்னால் தாங்கமுடியவில்லை. நான் கனவில்கூட இப்படிச் செய்வார் என நினைக்கவில்லை. இதயம் வெடித்து விடும்போல் இருக்கிறது" எனக்கூறினார்.

நாரதமுனிவரோ, "தாயே!, வருந்த வேண்டாம். இது உலக இயல்பு. மாயவன் ஒரு கபட நாடகக்காரன். அவருடைய அன்பு முழுக்க உருக்குமணியிடம்தான். இதை இப்போதுதானா நீங்கள் அறிகின்றீர்கள். ஆகக்குறைந்தது ஒரு பாரிஜாத மலரையாவது உங்களிடம் தந்திருக்கலாமல்லவா! உங்களுக்கு அளந்தது அவ்வளவுதான். மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள். நான் வருகிறேன்" எனக்கூறி சத்தியபாமாவின் கோபதாபத்தை மேலும் தூண்டிவிட்டு அவ்விடத்தைவிட்டு அகன்றார்.

அன்று மாலை வழமைபோல் மாயவன் சத்தியபாமாவைக் காண அந்தப்புரம் வந்தபோது, "இது என்ன கொடுமை?, என் மனைவி இப்படி அலங்கோலமாக இருக்கிறாளே, தோகையை உரித்த மயில் போல, கண்ணீர் வெள்ளத்தில் அரற்றிக் கொண்டிருக்கிறாளே", எனப் பதட்டத்துடன் ஓடிவந்து, அப்படியே வாரித்தூக்கி, "உனக்கு என்ன நேர்ந்தது? நீ வருந்தக் காரணம் யாது? எனக்கு உள்ளதை உரையாய் என் அன்பு மிக்கவளே!" எனக் கேட்கலானார்.

"சுவாமி, நடிக்காதீர்கள். உங்களுக்குத் தெரியாததா? நீர் என்மீது வைத்திருக்கும் அன்பு போலியானது! உமக்கு இங்கு இடம் கிடையாது! நீர் போகலாம்" என வாயிலை நோக்கிச் சைகை காண்பித்தார் சத்தியபாமா.

மாயவனோ, "என் அன்பே! உன்னை என் உயிராகவல்லவா நான் நினைக்கிறேன். கண்ணே! உன் இந்நிலைக்குரிய காரணத்தைச் சொல்வாயாக?" என மீண்டும் வலியுறுத்த,
"ஏன் இந்த வஞ்சனை செய்தீர் எனக்கு! இந்திரலோகத்துப் பாரிஜாத மலர்மாலையை எனக்குத் தராமல் யாருக்குக் கொடுத்தீர்? என்மீது அன்பிருந்தால் எனக்கல்லவா தந்திருக்க வேண்டும்! உமது நடிப்பை நான் நம்ப வேண்டுமா?" என்றார் சத்தியபாமா.

கண்ணபிரானோ, "ஓகோ! இது இந்தக் கலகக்கார நாரதருடைய நாடகம் என்பதை அறிந்து, "கண்ணே என் கண்மணியே! வருந்தாதே! உன்னிடம் வரும் வழியில் உருக்குமணி அம்மையைத் தற்செயலாகச் சந்தித்தபோது மாலையைக் கொடுக்க வேண்டியதாகி விட்டது, நீ கவலையுறாதே! இன்றே உனக்குப் பாரிஜாத மலர்மாலை என்ன! அந்த விருட்சத்தையே உன்னிடம் கொண்டு வந்து தருகிறேன்" என்று கூறிக் கொண்டிருக்கும்போது, நாரதர் அவ்வழியால் வருவதுபோல் வர, மாயவனோ, "நாரதரே! வாரும். உம்மால் நேர்ந்த செய்கையால் ஏற்பட்ட விளைவைப் பார்த்தீரா? உம்முடைய கலக விளையாட்டால் நான் படும்பாடு இருக்கிறதே! சரி! உம்மைத் திருத்த இயலாது! உடனே இந்திரலோகம் சென்று, இந்திரனைக் கண்டு, பாரிஜாத விருட்சத்தை இங்கு அனுப்புமாறு கேளும். அதுவும் இன்றைய பொழுதுக்குள் அந்த விருட்சம் இங்கு வரவேண்டும். நான் கூறியதாகக் கூறும். விரைந்து செல்லும்." என்றார் கண்ணன்.

நாரதரோ, "இந்திரலோகத்தில் என்ன நடக்கப்போகிதோ தெரியாது" என்று தனக்குள் முணுமுணுத்தவாறு, இந்திரலோகம் சென்று, தெய்வேந்திரனைக் கண்டு கண்ணபிரானுடைய கட்டளையைக் கூறினார்.

இந்திரன் நாரதர் கூறியதைக் கேட்டு நகைப்புற்று, "என்ன இது புதுக்கதையாக இருக்கிறது. இப்பாரிஜாத விருட்சம் ஒன்றை மண்ணுலகம் அனுப்புவதா! இவ் விருட்சம் பாற்கடலைக் கடைந்த போது ஏற்பட்ட அமுதத்துடன் தோன்றிய ஐந்து தருக்களாகிய கற்பகம், அரிச்சந்தனம், பாரிஜாதம், மந்தாரம், சந்தாளம் என்ற தருக்களில் ஒன்றல்லவா!. நாரதரே இதன் மகிமையும், பெருமையும் உமக்குத் தெரியாதா! எனவே இவ்விருட்சத்தை உம்மிடம் கொடுத்து அனுப்ப முடியாது. உம்மை வெறும் கையனாக என்னால் அனுப்ப

முடியாது. ஆகவே, பாரிஜாத மலர் ஒன்றை உம்மிடம் தருகிறேன்" என்று சொல்லிப் பாரிஜாதமலர் ஒன்றைக் கொடுத்து அனுப்பினான்.

நாரதர் விரைந்து சென்று பாரிஜாத மலர் ஒன்றைக் கண்ணனிடம் கொடுத்து, நடந்த விடயங்களைக் கூற, மாயவனாகிய கண்ண பிரான் வெகுண்டெழுந்து, "நன்றி கெட்டவன். என்ன, விருட்சத்தை தர மறுத்துவிட்டனா? அவனுக்கு நான் செய்த உதவிக்கு இதுவா அவன் செய்கின்ற பரிகாரம்? என்ன செய்கிறேன் பார். அவனுக்கு நான் நல்ல புத்தி புகட்டுகிறேன் என்று சொல்லி, சத்தியபாமை! நீ எதற்கும் கவலைப்படாதே!" ஏன்று கூறிவிட்டு, ஆயுதபாணியாக தேரேறி விண்ணுலகம் சென்றார்.

தேவலோக மன்னனாகிய இந்திர னுக்கும், தேவகி பெற்றெடுத்த புதல்வனாகிய மாயவனுக்கும் போர் மூண்டது. போர் பல நாள்கள் நீடித்தது. தேவர்கள் புறமுதுகிட்டு ஓடினார்கள். இந்திரனுக்கும் மாயவனுக்கும் நேர் நேராகப் போர். இந்திரனுடன் சிறிது நேரம் போரிட்ட மாயவன், இந்திரனை அழிக்க எண்ணிச் சிவபெருமானால் தனக்கு அளிக் கப்பட்ட சக்கராயுதத்தை எடுத்தார். அப்போது நடந்த பேரழிவைக் கண்ட காசிப முனிவர் உடனே அவ்விடம் வந்து இருவரையும் சமாதானம் செய்து போரை நிறுத்தினார்.

பின்பு இந்திரன் கண்ணபிரானை வணங்கிப் பாரிஜாத விருட்சத்தைக் கொடுத்தனுப்பினான். அவ்விருட்சத்தை பூலோகம் கொண்டு வந்து கண்ணபிரான் சத்தியபாமாவிடம் கொடுத்து அவளை மனம் குளிரச்செய்தார். சத்தியபாமா மிகவும் மனம் மகிழ்ந்தாள்.

நாரதர் செய்த கலகத்தால் மண்ணுலகததுக்குப் பாரிஜாத விருட்சம் வந்து சேர்ந்தது.

# தருமரும் கர்ணனும்

"தருமரும் தருமம் செய்கிறார், கர்ணனும் தருமம் செய்கிறார். ஆனால் கர்ணனைத்தான் சிறந்த கொடையாளி என்கிறார்கள்; அதிக புகழும் இருக்கிறதே! என்ன காரணம்?" என்று அருச்சுனன் கண்ணனைக் கேட்டான். "என்னுடன் வா, பதில் கிடைக்கும்" என்று கண்ணன் அருச்சுனனை அழைத்துக்கொண்டு சென்றார்.

இருவரும் பிராமண வடிவங்கொண்டு முதலில் தருமரிடம் போனார்கள். அங்கே யாகம் செய்வதற்குச் சந்தனக் கட்டைகள் வேண்டும் என்று கேட்டார்கள். தருமர் உடனே ஆட்களை அழைத்து, சந்தன மரங்களை வெட்டிவரும்படி கூறினார். ஆனால் அவர்கள் வெட்டிவந்த மரங்கள் மழையில் நனைந்திருந்ததால் பயனற்றவையாக இருந்தன.

பின்னர். இருவரும் கர்ணனிடம் சென்றார்கள். அங்கு சந்தனக்கட்டை வேண்டும் என்று கேட்டவுடன், "மழை பெய்வதால் வெளியே வெட்டிய மரம் பயன்படாது. இருங்கள்" என்ற கர்ணன் ஒரு கோடரியைத் தருவித்து, அரண்மனையில் இருந்த சந்தனத்தால் ஆன கதவு, யன்னல் ஆகியவற்றை வெட்டிக் கொடுத்தான்.

திரும்பும் வழியில், "பார்த்தாயா அருச்சுனா! தருமரும் நாங்கள் கேட்டிருந்தால் கதவு களை மறுக்காது வெட்டிக் கொடுத்திருப்பார். ஆனால் அவராகச் சிந்தித்து அதைச் செய்யவில்லை. கர்ணனோ நினைத்து அதைச் செய்தான். தருமர் செய்தது தருமம்; கர்ணன் செய்தது விருப்பம். எந்த வேலையையும் விருப்பத்துடன் செய்தால் அது போற்றப்படும் செயலாகும்" என்றார்.

கடமைக்காகவோ, நிர்ப்பந்தத்துக்காகவோ, தேவைக்காகவோ எதுவாக இருந்தாலும் செய்வதை விருப்பத்துடன் செய்தால் வெற்றி நிச்சயம்.

**தகவல்: அ. திருக்கேதீஸ்வரன்**

# இயற்கையும் இறைவனும்

- அநுஜா -

இறைவன் பஞ்சபூதத்தால் உலகைப் படைத்து அது இயங்கும்வகையில் அதில் ஊடுருவி அங்கிங்கெனாதபடி எங்கும் எதிலும் நிறைந்திருக்கிறான். அதனால், "அவனன்றி ஓரணுவும் அசையாது" என்று ஆன்றோர் பகன்றுள்ளனர். சின்னஞ்சிறு எறும்பும் தனக்கென ஒருவாழ்வை அமைத்து வாழ்வதைக் காணலாம். இதேபோலப் புல், பூண்டு, மரம், செடி, கொடி, பூச்சி, புழுக்கள், பறவைகள், மிருகங்கள், நீர்வாழ்வன, மனிதகுலம் யாவுமே வெவ்வேறு வகையில் தத்தமக்கென ஒரு வாழ்க்கை முறையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றன. அவற்றை உற்று நோக்கும்போது, இறைவனின் அற்புதமான படைப்பை அவதானிக்க முடிகிறது. இறையுணர்வில் ஊறித்திளைக்கும் அடியார்கள் எங்கும் எதிலும் இறைவனையே காண்பார்கள்.

திருமூலர் ஒரு பாடலில் "பரத்தை மறைத்தது பார்முதல் பூதம், பரத்தில் மறைந்தது பார்முதல் பூதமே" என்று பாடியுள்ளார். சாதாரண மனிதர்களுக்கு ஐம்பூதத்திலான உலகம் மட்டுமே தெரியும். ஆனால் அடியார்களுக்கு அந்த ஐம்பூதத்தில் மறைந்திருக்கும் இறைவனே தெரிவான்.

பகவத்கீதையில் பதின்மூன்றாம் அதிகாரத்திலுள்ள சுலோகமும் இதனையே விளக்குகின்றது. இதைப் பின்வரும் பாடல்மூலம் அறியலாம்:

இருப்பிடம் உடலே என்றும்
இருப்பதோ உயிர்தான் என்றும்
இரண்டிவை இணைந்தா லன்றி
எப்பொரு ளேனு மில்லை
அரியதாம் உடலா னாலும்
ஆவியாய் இயங்கச் செய்யும்
பெருமைதான் எனக்கே யுண்டு
பிறிதில்லை என்றான் கண்ணன்

சுருக்கமாகக் கூறின் உடலாகிய (எல்லாவிதமான உடலிலும்) இருப்பிடங்களில் உயிராய் இருப்பவன் நானே எனக் கண்ணன் அருச்சுனனுக்குக் கூறுகிறான். இதிலிருந்து இயற்கையை இயக்குபவன் இறைவனே என்பது புலனாகின்றது.

மணிவாசகரின் சிவபுராணத்தில் வரும் வரிகளும் இதனையே விளக்குவதைக் காணலாம்.

"ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்"

அளந்து மதிப்பிடமுடியாத மாபெரும் சக்தியாய் விளங்கி உலகை இயங்கவைக்கும் இறைவனின் பெருமையையே மேலுள்ள அடிகள் மேலும் வலியுறுத்துகின்றன.

அபிராமி அந்தாதியிலும் குமரகுருபரர் இக்கருத்தைக் கூறுவதைக் காணலாம்.

"பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே"

கண்ணுக்குத் தெரியாது இருந்தாலும் இறைசக்தியே உலகை இயக்குகிறது என்பது வெள்ளிடை மலை.

அப்பர் சுவாமிகளின் தேவாரங்களிலும் இக்கருத்தைக் காண இயலும்

"எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்ப மேவி இருந்தாய் நீயே"
"ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே"
"வாச மலரெலாம் ஆனாய் நீயே"

ஊருக்கு அழகூட்டுபவை நறுமணமுள்ள, பல நிறங்களிலுள்ள, பல வடிவங்களிலுள்ள மலர்களாகும். அந்த அழகை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. இந்த அழகுக்கும் உலகிலுள்ள இயற்கையான இனிமையான ஓசைகளுக்கும் இடி, முழக்கம் போன்ற பயங்கரமான ஓசைகளுக்கும் பொறுப்பானவன் இறைவன் ஒருவனே!

"வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி"
"காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி"
"பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி"
"எண்ணும் எழுத்தும்சொல் லானாய் போற்றி"
"விண்ணும் நிலனும்நீ யானாய் போற்றி"

என அப்பர் அருளிய வரிகள் யாவும் இயற்கையும் இறைவனும் வேறல்ல, ஒன்றே என்பதை உறுதிப்படுத்துகின்றன.

அப்பர் சுவாமிகள் தமது இன்னுமோர் பாடற் பகுதியில் இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துவதைக் காணலாம். "ஸ்ரீருத்ரசாரம்" எனப் போற்றப்படும் நின்ற திருத்தாண்டகத்தின் பத்துப் பாடல்களும் இறைவன் இயற்கையுடன் கலந்திருக்கும் மாட்சியை இயம்புகின்றன. அதில் முதலாவது பாடலை மட்டும் இங்கே காண்போம்:

இருநிலனாய்த் தீயாகி நீரும் ஆகி
இயமான னாயெறியும் காற்று மாகி
அருநிலைய திங்களாய் ஞாயி றாகி
ஆகாச மாயட்ட மூர்த்தி யாகி
பெருநலமுங் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறருருவும் தம்உருவும் தாமே யாகி
நெருநிலையாய் இன்றாகி நாளை யாகி
நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே

இயற்கையெல்லாம் இறைவனுள் ஒடுக்கம். இறைவனை அடைய, உணரவைக்க வழிகாட்டுவது இறைவழிபாடாகும்.

இறைவனை உணர்ந்தவரும் அதை உலகுக்கு அறிவித்தவருமான சுவாமி விவேகானந்தர் அதற்கு எவ்வாறு உவமை சொல்கிறார் என்று பார்க்கலாம்.

சுவாமி விவேகானந்தர் ஒருமுறை அமெரிக்காவிலிருந்து தன்னுடைய சில சீடர்களுடன் கப்பலில் இலண்டன் நோக்கிப் பயணமாகிறார். கப்பலின் மேற்தளத்திலிருந்து இயற்கை அழகை இரசிப்பார். அதனை இடையிடையே சீடர்களுக்கும் எடுத்துரைப்பார். ஒரு நாள் நல்ல நிலவொளியில் தம்மை மறந்து இலயித்திருந்தார். அப்போது தன் சீடர்களை நோக்கி, "மாயையே

இவ்வளவு அழகாக இருக்குமானால் மாயைக்குப் பின்னால் இருக்கும் அற்புத உண்மையின் அழகு எப்படியிருக்கும் என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள்" என்று பரவசமாகக் கூறினார்.

கண்ணுக்கினிய காட்சிகளும் காதுக்கினிய ஓசைகளும் (பாடல்களும் இயற்கை ஒலியும்) கருத்துக்கினிய வாழிவியல் உண்மைகளும் மக்களுக்கு இன்பம் தருவன. ஆனால் இவையெல்லாம் தற்காலிகமானவை. இவற்றுக்கெல்லாம் மேலான நிலையான இன்பம் தருவது இறையுணர்வேயாகும் அதாவது இறைவனை எம்முள்ளே காண்பதாகும். அதுவே மனிதப் பிறவியில் நாம் தேடவேண்டிய, நாடவேண்டிய முத்தியின்பமாகும். அதனால்தான் மானுடப் பிறப்பின் உயர்வைக் குறிப்பிடவந்த ஔவையார் "அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார்.

# விநாயகர் துதி

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்

- சேக்கிழார் புராணம்

எடுக்கும் மாக்கதை இன்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை ஐந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்துள் இருத்துவாம்

- பெரியபுராணம்

திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

- கந்தபுராணம்

பண்ணிய மேந்துங் கரந்தனக் காக்கிப்
　　பாநிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க் காக்கி அரதனக் கலச
　　வியன்கரம் தந்தைதாய்க் காக்கிக்
கண்ணிலா ணவவெங் கரிபிணித் தடக்கிக்
　　கரிசினேற் கிருகையு மாக்கும்
அண்ணலைத் தணிகை வரைவளர் ஆபத்
　　சகாயனை அகந்தழீஇக் களிப்பாம்

- தணிகைப்புராணம்

கணபதியை வழிபடச் சில தோத்திரப் பாடல்கள். ஐந்து கரத்தனை, பாலும் தெளிதேனும் என்பவற்றோடு இவைகளையும் ஓதலாம்.

**தொகுப்பு: அநுராதா**

# ஏனத்தால் வந்த சாபம்

## உண்மை நிகழ்வு

பல ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த ஓர் உண்மை நிகழ்வு இது. பட்டுக்கோட்டை என்ற ஊரில் உள்ளது ஒரு சிறிய கிராமம். அங்கே ஒரு பண்ணையார் இருந்தார். அவர் பெரிய நிலச் சொந்தக்காரர். அந்தக் கிராமத்தில் ஓர் ஆலயமும் இருந்தது. அந்த ஆலயத்தில் முப்பொழுதும் அர்ச்சிக்க ஓர் அர்ச்சகர் இருந்தார். அவர் கோயிலில் திருப்பணி செய்தலன்றி வேறு ஒன்றிலும் ஈடுபாடு இல்லாதவர். ஒழுக்கசீலர். தானுண்டு, தன் வேலையுண்டு என்று இருப்பவர். அந்தக் கிராம மக்கள் கொடுக்கும் அரிசி, காய்கறி போன்றவைதான் அந்த அர்ச்சகருக்கும் அவர் குடும்பத்துக்கும் உணவாக அமைந்தது.

ஒரு நாள் நல்ல வெயிலில் அந்த அர்ச்சகர் நடந்து வந்தார். கடுமையான வெயில் என்பதால் அவர் மிகவும் களைத்துவிட்டார். மிகவும் தாகம் எடுத்தது. போகும் வழியில் பண்ணையார் வீடு இருந்தது. பண்ணையாரின் வீட்டைச் சுற்றிப் பல தென்னைமரங்கள் இருந்தன. அவை நல்ல பராமரிப்பின் காரணமாகக் காய்த்துத் தொங்கின. அங்கே சென்றால் தாகத்துக்கு அருந்த இளநீர் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அர்ச்சகர் அங்கு சென்றார். வாசலில் பண்ணையார் ஒரு சாய்வு நாற்காலியில் இருந்தார். அவர்முன்னால் சென்ற அர்ச்சகர், "வெய்யிலால் மிகவும் தாகமாக இருக்கிறது. பருகுவதற்கு இளநீர் கிடைக்குமா?" என்று பணிவாகப் பண்ணையாரைக் கேட்டார்.

பண்ணையார் வந்த அர்ச்சகரை இருக்கச்சொல்லிவிட்டுப் பின்புறம் சென்றார். தோட்ட வேலையாள் ஒருவரை அழைத்தார். நல்லதாக ஓர் இளநீர் பறித்து வெட்டி வரும்படி கூறினார். வேலையாளும் பண்ணையார் சொன்ன பணியை உடனடியாகச் செய்தான். இளநீர் கையிலே கிடைத்தவுடன் பண்ணையாருக்கு மனத்திலே ஒரு கெட்ட எண்ணம் தோன்றியது. இந்த ஐயருக்கு இளநீர் கேட்குதா? என்று மனத்தில் நினைத்தவாறு, தானே அந்த இளநீரில் கொஞ்சம் பருகினார். பின்னர் அதில் தனது சிறுநீரைக் கழித்துக் கலந்து எடுத்துவந்தார். கொண்டுவந்து பவ்யமாக இளநீரை அர்ச்சகர் கையிலே கொடுத்தார்.

மிகக் களைத்து வந்திருந்ததால், அர்ச்சகர் ஆவலுடன் இளநீரை வாங்கி அருந்த முற்பட்டார். ஒரு துளி உதட்டிலே பட்டதும் அது சுத்தமான இளநீரல்ல என்பது அர்ச்சகருக்குப் புரிந்துவிட்டது. அதைத் தூக்கித் தூர வீசினார். வாயில் போனதையும் வெளியே உமிழ்ந்தார். கோபம் மேலிட்டது. "உன் சந்ததியில் இனி யாருக்குமே சரியாகப் பல் முளைக்காது" என்று கோபத்தோடு கூறிவிட்டு அவ்விடத்தை நீங்கினார் அந்த அர்ச்சகர்.

ஆறு சந்ததிக்கு முன்னர் நடந்த நிகழ்வு இது. செவிவழிச் செய்தி என்றாலும் சொன்னவர் உண்மையென்று உறுதி செய்தார். இன்றும் அந்தச் சந்ததியில் வரும் பிள்ளைகளுக்குப் பல்லில் ஏதாவது குறை இருக்கிறது; பல் சரியாக முளைப்பதில்லை.

தவித்து வந்தவர் யாராக இருந்தாலும் அவரை உபசரித்து முடிந்தவரை உதவி செய்வதுதான் மனிதப் பண்பு. ஆனால் வந்தவரோ ஓர் அர்ச்சகர். இறைதொண்டு செய்பவர். அவரை அந்தப் பண்ணையார் மிகவும் அவமதித்து விட்டார். அப்படி அவமதித்ததால் இன்று அவரின் பரம்பரையே இன்னல் அநுபவித்துக் கொண்டிருக்கிறது. கொடுக்க விருப்பம் இல்லையென்றால் கொடுக்க மறுத்திருக்கலாம். அது ஒரு சிறு குறையாக இருந்திருக்குமே அன்றிச் சாபம் கொடுத்திருக்காது.

# கண்ணனும் தாத்தாவும்



**முத்து**

இந்த வருடம் ஈஸ்டர் விடுமுறை (பெரிய வெள்ளி) தமிழ் வருடப்பிறப்புடன் வந்ததால் கண்ணனுக்கு ஒரே குதூகலம். தாத்தாவுடன் விருப்பமான இடங்களுக்குப் போவதிலும் தொலைக்காட்சி பார்த்து மகிழ்வதிலும் சந்தோஷமாகப் பொழுது கழிந்தது. வழமைபோல வருடப்பிறப்புக்கு அம்மா, அப்பா, தாத்தா, பாட்டியுடன் கோயில்களுக்குப் போய்வந்தான். பல நண்பர்களையும் அவர்களுடைய பெற்றோர்கள், உறவினர்களையும் சந்தித்ததில் இரட்டிப்பு மகிழ்ச்சி. தவறாது ஸ்ரீராமுடனும் பேசினான். ஈஸ்டர் ஞாயிறு விசேடம் பற்றியும் தாத்தாவிடம் கேட்டறிந்துகொண்டான். சிலுவையில் அறையப்பட்ட யேசுநாதர் உயிர்த்தெழுந்த செய்தியைமட்டும் அவனால் நம்பமுடியவில்லை.

கண்ணன்: தாத்தா! எப்படி இறந்த ஒருவர் மூன்று நாள்களுக்குப்பிறகு உயிர்த்தெழ முடியும்? நம்ப இயலாது இருக்கிறதே!.

தாத்தா: ஆண்டவன் அருளால் உலகில் எத்தனையோ அதிசயங்கள் நடைபெறுகின்றன. நமது நாயன்மார் வரலாறுகளில் எல்லாம் படித்திருக்கிறோமே! அப்பூதியடிகளின் மகன் பாம்பு கடித்து இறந்தபின் உயிர்பெற்று எழுந்தது, பூம்பாவை உயிர்த்தது, முதலை விழுங்கிய சிறுவன் மீண்டு வந்தது எனப் பல சம்பவங்கள் உண்டு. நீ வளர்ந்து பெரியவன் ஆனபின் பல விஷயங்களை அவதானித்து அறியலாம்.

கண்ணன்: ஆமாம் தாத்தா, பல அற்புதங்களைப்பற்றி நீங்கள் எனக்குச் சொல்லியிருக்கிறீர்கள். இன்று புதிதாக ஏதாவது ஒரு கதை சொல்லுங்கள் தாத்தா, உங்கள் கதை கேட்டுப் பலகாலம் ஆகிவிட்டது.

தாத்தா: அப்படியா? ஸ்ரீராமையும் skype இல் அழை. இருவருக்கும் சேர்த்து ஒரு கதை சொல்கிறேன். அவனும் விரும்பிக் கேட்பான். உங்களைப்போல ஒரு சிறுவனின் கதைதான்.

கண்ணன்: ஓ! அதுவும் நல்ல idea தான் தாத்தா, அவனுக்கும் விடுமுறைதானே. இதோ இப்பொழுதே அழைக்கிறேன்.

தாத்தா: ஸ்ரீராம் கதை கேட்பதுடன் தமிழும் படிக்கலாம். அவனுக்குக் கடவுள் நம்பிக்கையும் ஏற்படும்.

கண்ணன் தாத்தாவுடன் பேசியபடியே கணினியில் skype தொடர்பை ஏற்படுத்தித் தாத்தாவின்

முன்னால் வைக்கிறான். அதிலே ஸ்ரீராமும் அவனின் தாத்தா சிவகுமாரும் தெரிகிறார்கள்.

தாத்தா: வணக்கம்! ஸ்ரீராம், வணக்கம் சிவா. இந்த Skype ஐ கண்டுபிடித்த விஞ்ஞானிக்குத் தலை தாழ்த்தி ஒரு பெரீ......ய நன்றி சொல்லவேண்டும். பாராட்டவும் வேண்டும்.

சிவகுமார்: மிக மிக உண்மையான விடயம். நீங்கள் எல்லோரும் எப்படி இருக்கிறீர்கள்? நலந்தானே!

கண்ணன்: நாங்கள் நல்ல சுகமாக இருக்கிறோம். எப்படி உங்கள் விடுமுறை போகிறது?

ஸ்ரீராம்: வணக்கம் தாத்தா, வணக்கம் கண்ணா! விடுமுறையில் நீ என்ன செய்கிறாய் கண்ணா?

கண்ணன்: நீ தமிழிலே பேசுவதைக் கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது ஸ்ரீராம்

சிவகுமார்: எல்லாம் உங்களைச் சந்தித்ததால் ஏற்பட்ட விளைவுதான் கண்ணா.

தாத்தா: உங்களைச் சந்தித்ததில் எங்களுக்கும் மிக்க மகிழ்ச்சிதான். பழைய நட்பு மீண்டும் தொடர ஒரு சந்தர்ப்பம். நல்லாரைக் காண்பதுவும் நன்றே என்றுதானே ஔவையாரும் சொல்லியிருக்கிறார்.

சிவகுமார்: அவற்றையெல்லாம் இப்போதுதான் மீட்டுப்பார்க்க நான் ஆரம்பித்துள்ளேன். ஞாபகப்படுத்தி அடுத்தமுறை சொல்வேன்.

கண்ணன்: அதை முதலில் ஸ்ரீராமுக்கும் சொல்லிக் கொடுங்கோ

சிவகுமார்: நீ நல்ல கெட்டிக்காரனாய் இருக்கிறாய் கண்ணா. அப்படியே செய்கிறேன். நான் நாளைக்கே அதை ஆரம்பிக்கிறேன்.

ஸ்ரீராம்: நான் அதை உனக்குப் பின்னர் படித்துக்காட்டுவேன் கண்ணா! சரிதானே?

தாத்தா: இவ்வளவு ஆர்வம் வந்துவிட்டதே ஸ்ரீராம். பிரமாதம். இன்று கடவுளின் அற்புதம் பற்றி ஒரு கதை சொல்லும்படி கண்ணன் கேட்டான்.

சிவகுமார்: அப்படியா? பிள்ளைகளுக்குக் கதை கேட்பதில் எப்போதும் ஆர்வந்தான். ஸ்ரீராமும் எப்போதும் கதை சொல்லும்படி கேட்பான்.

தாத்தா: ஆமாம் அது உண்மைதான். அதுதான் நான் கண்ணனிடம் ஸ்ரீராமைக் அழைக்கச்சொன்னேன்.

ஸ்ரீராம்: சொல்லுங்கோ தாத்தா! I love it

கண்ணன்: எனக்குக் கதை கேட்க மிகவும் விருப்பம் என்று தமிழிலே சொல் ஸ்ரீராம்

ஸ்ரீராம்: சரி சொல்கிறேன். எனக்குக் கதை கேட்க மிகவும் விருப்பம்.

கண்ணன்: கெட்டிக்காரன் ஸ்ரீராம். (எல்லோரும் கை தட்டுகிறார்கள்) தாத்தா கதையை ஆரம்பியுங்கள்.

தாத்தா: சுவாமி விவேகானந்தர் என்றொரு மகான் இருந்தார். அவருக்கு மிகவும் பிடித்த கதை இது. அவர் சிறுவனாக இருந்தபொழுது அவரது வீட்டிலிருந்த மூதாட்டி இந்தக் கதையை அவருக்குச் சொன்னார்களாம். அவருக்கு அந்தக் கதை மிகவும் பிடித்துவிட்டதால் அந்தக் கதையைச் சொல்லும்படி அடிக்கடி கேட்டு இரசித்து மகிழ்வாராம்.

சிவகுமார்: அப்படியானால் அது மிகவும் நல்ல கதையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

தாத்தா: ஆமாம் கேட்டுப்பாருங்கள். மிகவும் ஏழையான பிராமணப் பெண் ஒருத்தி இருந்தாள். அவள் கணவன் திடீரென இறந்துவிட்டான். அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை இருந்தது. அதை வளர்க்க அவளிடம் போதிய பணம் இல்லை. பிராமணப் பையன் என்பதால் அவன் கட்டாயம் படித்தே ஆகவேண்டும் என்றொரு மரபு அந்தக்காலத்தில் இருந்தது. அவள் வாழ்ந்த அந்தச் சிறிய ஊரில் ஆசிரியர்கள் இல்லை. பக்கத்து ஊருக்குச் சென்றுதான் படிக்கவேண்டும். அங்கு போவதற்கு வழியில் ஒரு காட்டைக் கடந்து நடந்து செல்லவேண்டும்.

கண்ணன்: அப்படியானால் அந்த ஊரில் பள்ளக்கூடமே இல்லையா தாத்தா?

தாத்தா: இருநூறு வருடங்களுக்கு முன் இப்போதுபோல அதிக பள்ளிக்கூடங்கள் இருக்கவில்லை. ஆசிரியர்கள் இருக்கும் இடங்களுக்கு மாணவர்கள் போய்ப் படிப்பார்கள். பணவசதி இல்லாத மாணவர்களுக்கு இலவசமாக ஆசிரியர்கள் பாடம் சொல்லிக்கொடுப்பார்கள். ஆனால் காலையிலும் மாலையிலுந்தான் படிப்பு நடைபெறும்.

ஸ்ரீராம்: இலவசம் என்றால் என்ன தாத்தா?

தாத்தா: பணம் எதுவும் வாங்காமற் சொல்லிக்கொடுப்பது ஸ்ரீராம்.

கண்ணன்: Free of charge ஸ்ரீராம். ஆனபடியால் அந்தச் சிறுவன் அங்கே போய்ப் படிக்க முடிந்தது.

சிவகுமார்: கதையை முழுவதும் கேள் ஸ்ரீராம். பிறகு நான் உனக்கு விளங்கும்படி சொல்கிறேன்.

ஸ்ரீராம்: சரி தாத்தா.

தாத்தா: அது பரவாயில்லை சிவகுமார். அவனுக்கு ஒன்றும் விளங்காவிட்டால் bore அடிக்கும் அல்லவா? சரி, மீதிக் கதையைக் கேளுங்கள். சிறுவன் காலையில் வகுப்புக்குச் செல்லும்போதும் மாலையில் வீடு திரும்பும்போதும் இருட்டாக இருக்கும். அதனால் காட்டு வழியாகத் தனியே செல்லச் சிறுவன் மிகவும் பயப்பட்டான்.

கண்ணன்: அதனால் படிக்கப்போக மறுத்துவிட்டானா தாத்தா?

தாத்தா: இல்லை கண்ணா! அவன் தாயிடம் தனக்கு ஓர் உதவியாளரை ஒழுங்குசெய்ய முடியுமா என்று கேட்டான். (மற்றைய மாணவர்களை யாராவது அழைத்துவருவதை அவன் அவதானித்து இருந்தான். அவனின் தேவையைக் கேட்டு மனம் வருந்திய தாய், "மகனே! உதவிக்கு ஆள் அனுப்புவதானால் பணம் கொடுக்கவேண்டும். என்னிடம் பணம் இல்லையே! நான் என்ன செய்வேன்?" என்றாள். "அம்மா! எனக்குப் பயமாக இருக்கிறதே! நான் எப்படித் தனியாகப் போவேன்?" என்று அவன் அழுதான். ஒன்றும் சொல்லமுடியாத அந்தத்தாய், கடவுள்தான் துணை என்று மனதில் எண்ணிக்கொண்டு, "மகனே! அந்தக் காட்டில் உன்னுடைய சகோதரன் கிருஷ்ணன் என்று ஓர் இடையன் இருக்கிறான். அவனைக் கூப்பிட்டால், அவன் வந்து உதவி செய்வான். உன்னைக் கவனித்துக்கொள்வான். கவலைப்படாதே!" என்று சொன்னாள்.

ஸ்ரீராம்: இடையன் என்றால் என்ன கண்ணா?

கண்ணன்: மாடு மேய்ப்பவன் ஸ்ரீராம்!

தாத்தா: அடுத்த நாள், பள்ளிக்கூடம் போகும்போது, காட்டுக்குள் அந்தச் சிறுவன், "அண்ணா! மாடுமேய்க்கும் அண்ணா! நீ எங்கு இருக்கிறாய்?" என்று கூப்பிட்டான். "தம்பி! நான் இங்கேதான் இருக்கிறேன்." என்றொரு குரல் கேட்டது. அதைக் கேட்டதும் சிறுவனுக்குப் பயம் போய்விட்டது. மனம் ஆறுதல் அடைந்தது. பிறகு இருவரும் அடிக்கடி சந்தித்துப் பேசிக்கொண்டார்கள். காட்டில் இருந்த கிருஷ்ணனுக்கும் இந்தச் சிறுவனின் வயதுதான் இருக்கும். அவன் சிறுவனுக்கு வழித்துணையாக நடந்தான், விளையாடினான். அதனால் சிறுவனின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

இந்த வேளையில் சிறுவனுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியரின் தந்தை இறந்துவிட்டார். அப்போது அவர் வீட்டில் நடந்த சடங்குக்கு மற்றைய மாணவர்கள் பல பொருள்களை அன்பளிப்பாகக் கொண்டுவந்து கொடுத்தார்கள். இந்தச் சிறுவனும் தன்னுடைய தாயிடம் ஆசிரியருக்குக் கொடுக்க ஏதாவது தரும்படி கேட்டான். தாய் பாவம், என்ன செய்வாள், "என்னிடம் ஒன்றும் இல்லையே மகனே!" என்று சொன்னாள். மகன், "எப்படி நான் வெறுங்கையுடன் போவேன்?" என்று அழுது புலம்பினான்.

கண்ணன்: புலம்புதல் என்றால் என்ன தாத்தா?

சிவகுமார்: அப்பா பிள்ளைகளுக்கு அவர்கள் கேட்பதை வாங்கிக் கொடுக்க மறுத்தால்

கண்ணன்: எனக்குக் கதை கேட்க மிகவும் விருப்பம் என்று தமிழிலே சொல் ஸ்ரீராம்

ஸ்ரீராம்: சரி சொல்கிறேன். எனக்குக் கதை கேட்க மிகவும் விருப்பம்.

கண்ணன்: கெட்டிக்காரன் ஸ்ரீராம். (எல்லோரும் கை தட்டுகிறார்கள்) தாத்தா கதையை ஆரம்பியுங்கள்.

தாத்தா: சுவாமி விவேகானந்தர் என்றொரு மகான் இருந்தார். அவருக்கு மிகவும் பிடித்த கதை இது. அவர் சிறுவனாக இருந்தபொழுது அவரது வீட்டிலிருந்த மூதாட்டி இந்தக் கதையை அவருக்குச் சொன்னார்களாம். அவருக்கு அந்தக் கதை மிகவும் பிடித்துவிட்டதால் அந்தக் கதையைச் சொல்லும்படி அடிக்கடி கேட்டு இரசித்து மகிழ்வாராம்.

சிவகுமார்: அப்படியானால் அது மிகவும் நல்ல கதையாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

தாத்தா: ஆமாம் கேட்டுப்பாருங்கள். மிகவும் ஏழையான பிராமணப் பெண் ஒருத்தி இருந்தாள். அவள் கணவன் திடீரென இறந்துவிட்டான். அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை இருந்தது. அதை வளர்க்க அவளிடம் போதிய பணம் இல்லை. பிராமணப் பையன் என்பதால் அவன் கட்டாயம் படித்தே ஆகவேண்டும் என்றொரு மரபு அந்தக்காலத்தில் இருந்தது. அவள் வாழ்ந்த அந்தச் சிறிய ஊரில் ஆசிரியர்கள் இல்லை. பக்கத்து ஊருக்குச் சென்றுதான் படிக்கவேண்டும். அங்கு போவதற்கு வழியில் ஒரு காட்டைக் கடந்து நடந்து செல்லவேண்டும்.

கண்ணன்: அப்படியானால் அந்த ஊரில் பள்ளக்கூடமே இல்லையா தாத்தா?

தாத்தா: இருநூறு வருடங்களுக்கு முன் இப்போதுபோல அதிக பள்ளிக்கூடங்கள் இருக்கவில்லை. ஆசிரியர்கள் இருக்கும் இடங்களுக்கு மாணவர்கள் போய்ப் படிப்பார்கள். பணவசதி இல்லாத மாணவர்களுக்கு இலவசமாக ஆசிரியர்கள் பாடம் சொல்லிக்கொடுப்பார்கள். ஆனால் காலையிலும் மாலையிலுந்தான் படிப்பு நடைபெறும்.

ஸ்ரீராம்: இலவசம் என்றால் என்ன தாத்தா?

தாத்தா: பணம் எதுவும் வாங்காமற் சொல்லிக்கொடுப்பது ஸ்ரீராம்.

கண்ணன்: Free of charge ஸ்ரீராம். ஆனபடியால் அந்தச் சிறுவன் அங்கே போய்ப் படிக்க முடிந்தது.

சிவகுமார்: கதையை முழுவதும் கேள் ஸ்ரீராம். பிறகு நான் உனக்கு விளங்கும்படி சொல்கிறேன்.

ஸ்ரீராம்: சரி தாத்தா.

தாத்தா: அது பரவாயில்லை சிவகுமார். அவனுக்கு ஒன்றும் விளங்காவிட்டால் bore அடிக்கும் அல்லவா? சரி, மீதிக் கதையைக் கேளுங்கள். சிறுவன் காலையில் வகுப்புக்குச் செல்லும்போதும் மாலையில் வீடு திரும்பும்போதும் இருட்டாக இருக்கும். அதனால் காட்டு வழியாகத் தனியே செல்லச் சிறுவன் மிகவும் பயப்பட்டான்.

கண்ணன்: அதனால் படிக்கப்போக மறுத்துவிட்டானா தாத்தா?

தாத்தா: இல்லை கண்ணா! அவன் தாயிடம் தனக்கு ஓர் உதவியாளரை ஒழுங்குசெய்ய முடியுமா என்று கேட்டான். (மற்றைய மாணவர்களை யாராவது அழைத்துவரு வதை அவன் அவதானித்து இருந்தான். அவனின் தேவையைக் கேட்டு மனம் வருந்திய தாய், "மகனே! உதவிக்கு ஆள் அனுப்புவதானால் பணம் கொடுக்கவேண்டும். என்னிடம் பணம் இல்லையே! நான் என்ன செய்வேன்?" என்றாள். "அம்மா! எனக்குப் பயமாக இருக்கிறதே! நான் எப்படித் தனியாகப் போவேன்?" என்று அவன் அழுதான். ஒன்றும் சொல்லமுடியாத அந்தத்தாய், கடவுள்தான் துணை என்று மனதில் எண்ணிக்கொண்டு, "மகனே! அந்தக் காட்டில் உன்னுடைய சகோதரன் கிருஷ்ணன் என்று ஓர் இடையன் இருக்கிறான். அவனைக் கூப்பிட்டால், அவன் வந்து உதவி செய்வான். உன்னைக் கவனித்துக்கொள்வான். கவலைப்படாதே!" என்று சொன்னாள்.

ஸ்ரீராம்: இடையன் என்றால் என்ன கண்ணா?

கண்ணன்: மாடு மேய்ப்பவன் ஸ்ரீராம்!

தாத்தா: அடுத்த நாள், பள்ளிக்கூடம் போகும்போது, காட்டுக்குள் அந்தச் சிறுவன், "அண்ணா! மாடுமேய்க்கும் அண்ணா! நீ எங்கு இருக்கிறாய்?" என்று கூப்பிட்டான். "தம்பி! நான் இங்கேதான் இருக்கிறேன்." என்றொரு குரல் கேட்டது. அதைக் கேட்டதும் சிறுவனுக்குப் பயம் போய்விட்டது. மனம் ஆறுதல் அடைந்தது. பிறகு இருவரும் அடிக்கடி சந்தித்துப் பேசிக்கொண்டார்கள். காட்டில் இருந்த கிருஷ்ணனுக்கும் இந்தச் சிறுவனின் வயதுதான் இருக்கும். அவன் சிறுவனுக்கு வழித்துணையாக நடந்தான், விளையாடினான். அதனால் சிறுவனின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

இந்த வேளையில் சிறுவனுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியரின் தந்தை இறந்துவிட்டார். அப்போது அவர் வீட்டில் நடந்த சடங்குக்கு மற்றைய மாணவர்கள் பல பொருள்களை அன்பளிப்பாகக் கொண்டுவந்து கொடுத்தார்கள். இந்தச் சிறுவனும் தன்னுடைய தாயிடம் ஆசிரியருக்குக் கொடுக்க ஏதாவது தரும்படி கேட்டான். தாய் பாவம், என்ன செய்வாள், "என்னிடம் ஒன்றும் இல்லையே மகனே!" என்று சொன்னாள். மகன், "எப்படி நான் வெறுங்கையுடன் போவேன்?" என்று அழுது புலம்பினான்.

கண்ணன்: புலம்புதல் என்றால் என்ன தாத்தா?

சிவகுமார்: அப்பா பிள்ளைகளுக்கு அவர்கள் கேட்பதை வாங்கிக் கொடுக்க மறுத்தால்

அவர்கள் ஏதாவது சொல்லிச் சொல்லி அழுவார்கள் அல்லவா? அதை அவர்கள் புலம்புகிறார்கள் என்று சொல்லலாம்.

கண்ணன்: ஆமாம் நான் பார்த்திருக்கிறேன்.

தாத்தா: நல்ல விளக்கம் சிவா! கதையைத் தொடர்வோம். இங்கே. அந்த அம்மாவிடம் மகனுக்குக் கொடுத்துவிட ஏதுவும் இல்லை. அவள், "மகனே! காட்டில் இருக்கும் உன் சகோதரன் கிருஷ்ணனைக் கேட்டுப்பார். அவன் ஏதாவது தருவான்" என்றாள். சிறுவனும் காட்டுக்குள் சென்று, "அண்ணா! ஆசிரியருக்குப் பரிசுப்பொருள் கொடுக்கவேண்டும். ஏதாவது தருகிறாயா?" என்று கேட்டான். கிருஷ்ணன் ஒரு செம்பு நிறையப் பால் கொடுத்தான். சிறுவன் அதை மிகச் சந்தோஷமாக வாங்கிக்கொண்டு ஆசிரியர் வீட்டுக்குச் சென்று வேலைக்காரர்களிடம் கொடுப்பதற்காகக் காத்துக்கொண்டு நின்றான். மற்றவர்கள் கொண்டுவந்த பொருள்களோ மிகவும் பெறுமதியாக, அழகாக இருந்ததனால் வேலைக்காரர்கள் அவற்றை வாங்கிக்கொண்டு சென்றார்களே ஒழிய இந்தச் சிறுவன் கொண்டுசென்றதைக் கவனிக்கவேயில்லை.

கண்ணன், ஸ்ரீராம்: பாவம் தாத்தா அந்தப் பையன். அப்படியே எவ்வளவு நேரம் நின்றான்? யாருமே வாங்கவில்லையா?

தாத்தா: என்ன நடந்தது என்று பொறுமையாகக் கேளுங்கள். அந்தச் சிறுவன் சிறிதுநேரம் நின்றுவிட்டு, நேராக ஆசிரியரிடம் போனான். போய், "குருவே உங்களுக்குப் பரிசுப்பொருள் தருவதற்காக் காத்திருக்கிறேன்" என்றான். இப்போதும் யாரும் அவனைக் கவனிக்கவில்லை. அந்தப் பையன் மீண்டும், "ஆசிரியர் பெருமானே! நான் இதோ உங்களுக்கு வெகுமதி கொண்டுவந்திருக்கிறேன்" என்று சொன்னான். ஆசிரியர் திரும்பிப் பார்த்தார். அவருக்கும் அது பெறுமதி குறைந்த பொருளாகவே தெரிந்தது. ஆகவே வேலைக்காரனைக் அழைத்து அந்தப் பாலை வாங்கி ஒரு பாத்திரத்தில் ஊற்றிவைத்துவிட்டுச் சிறுவனை அனுப்பிவிடு என்று கூறினார்.



கண்ணன்,
ஸ்ரீராம்: Oh my God, கடைசியாக வாங்கிவிட்டார்களா?

தர்தா: ஆமாம் வேலைக்காரப் பையன் பாலை வாங்கிக் கொண்டுபோய் ஒரு பாத்திரத்தில் ஊற்றினான். என்ன ஆச்சரியம்! ஊற்ற ஊற்றப் பால் செம்பிலிருந்து வந்துகோண்டேயிருந்தது. அங்கிருந்த எல்லோரும் வியப்புடன் பார்த்னர்.

கண்ணன்,
ஸ்ரீராம்: அப்படியா தாத்தா! நம்பவேமுடியவில்லை. பிறகு எல்லோரும் என்ன செய்தார்கள்? யாரும் மயங்கி விழவில்லையா?

தாத்தா: ஒருவருக்குமே பேச்சு வரவில்லை. ஆச்சரியத்தில் ஆழ்ந்த ஆசிரியர், "தம்பி! இந்தச் செம்பு உனக்கு எப்படி, எங்கே கிடைத்தது?" என்று கேட்டார். அதற்கு அந்தச் சிறுவன், "காட்டில் மாடுமேய்க்கும் அண்ணன் கிருஷ்ணன் இதைத் தந்தான்" என்று சொன்னான். "என்ன? நீ கிருஷ்ணனைப் பார்த்தாயா? என்று அங்கிருந்தோர் கேட்டனர். அதற்குச் சிறுவன், "அவனும் நானும் பேசவோம், விளையாடுவோம்" என்றான். அப்படியானால் அவனை எங்களுக்கும் காட்டுவாயா என்று அனைவரும் கேட்டனர். என்னுடன் வாருங்கள் காட்டுகிறேன் என்றான் சிறுவன். ஆசிரியரும் மற்றவர்களும் சிறுவனுடன் காட்டுக்குச் சென்றனர். அங்கு சென்றதும் சிறுவன், "மாடு மேய்க்கும் அண்ணா! இங்கே என் ஆசிரியர் உன்னைப் பார்க்க வந்துள்ளார். நீ எங்கே இருக்கிறாய்?" என்று கூப்பிட்டான். பதில் இல்லை. மீண்டும் மீண்டும் கூப்பிட்டான். பதிலே இல்லை. அதனால் சிறுவன் அழுதுகொண்டே, "அண்ணா! உடனே இங்கே வா. நீ வராவிட்டால் இங்கே எல்லோரும் என்னைப் பொய்யன் என்று சொல்வார்கள்" என்று நாக்குத் தழுதழுக்கக் கூறினான். அப்போது தூரத்திலிருந்து ஒரு குரல், "நீ தூயவன் ஆதலாலும் உரிய காலம் வந்ததாலும் நான் உன்னிடம் வந்தேன். உன் ஆசிரியர் என்னைக் காண இன்னும் பல பிறவிகள் எடுக்கவேண்டும்" என்று கூறிற்று.

கண்ணா, ஸ்ரீராம் எப்படி இந்தக் கதை? விளங்கியதா?

கண்ணன்: நல்ல கதை தாத்தா. கடவுளை எல்லோராலும் காண இயலாது. மனத்தூய்மையும் பத்தியும் உள்ளவர்களாலேதான் கடவுளைக் காண இயலும் என்ற கருத்தை இந்தக் கதை சொல்கிறது.

ஸ்ரீராம்: எனக்கும் விளங்கியது தாத்தா but not 100%

தாத்தா: உன் தாத்தா உன்னை 100% understand பண்ண வைப்பார். அவரிடம் கேட்டு ஏதும் விளங்காவிட்டால் என்னிடம் கேள். மீண்டும் சந்திப்போம். உங்களுடன் பேசியதும் கதை சொன்னதும் சந்தோஷம். இப்போதைக்கு Bye, Bye.

# Hinduism in search of Answers........

Compiled by S Atputhananthan

## AT TEMPLES

### Why do we do pradakshina (circumambulate)?

We cannot draw a circle without a centre point. The Lord is the centre, source and essence of our lives. Recognising Him as the focal point in our lives, we go about doing our daily chores. This is the significance of pradakshina.
Also every point on the circumference of a circle is equidistant from the centre. This means that wherever or whoever we may be, we are equally close to the Lord. His grace flows towards us without partiality. - Swami Chinmayananda



Indian scriptures enjoin – matrudevo bhava, pitrudevo bhava, acharyadevo bhava. May you consider your parents and teachers as you would the Lord. With this in mind we also do pradakshina around our parents and divine personages.

Apart from normal Pradakshina, we come across special types of Pradakshina like...

- Giri Pradakshina (Girivallam of the famous Shri Arunanchaleshwara mountain in Tiruvannamalai)
- Anga Pradakshina



- Praakaara Pradakshina

### Why is pradakshina done only in a clockwise manner?

The reason is not, as a person said, to avoid a traffic jam! As we do pradakshina, the Lord is always on our right. In India the right side symbolises auspiciousness. So as we

circumambulate the sanctum sanctorum we remind ourselves to lead an auspicious life of righteousness, with the Lord who is the indispensable source of help and strength, as our guide – the "right hand".
After the completion of traditional worship (pooja), we customarily do pradakshina around ourselves. In this way we recognise and remember the supreme divinity within us, which alone is idolised in the form of the Lord that we worship outside.


- Swami Chinmayananda

Prdakshina in sanskrit means 'going to your right'. In the Northern Hemisphere of the earth, you will notice many natural phenomena turn clockwise and in Southern Hemisphere they turn anti clockwise. It is applicable to air, water and many other enegy systems as well. As India is situated above equator, going in clockwise direction direction harnesses the energies in the holy places.

- Satguru Vasudev.

**Why do we ring the bell in a temple, and blow a conch shell?**






Is it to wake up the Lord? But the Lord never sleeps. Is it to let the Lord know we have come? He does not need to be told, as He is all-knowing. Is it a form of seeking permission to enter His precinct? It is a homecoming and therefore entry needs no permission. The Lord welcomes us at all times. Then why do we ring the bell?

The ringing of the bell and blowing of conch shell both produce what is regarded as an auspicious sound. It produces the primeval sound OM, the universal name of the Lord. There should be auspiciousness within and without, to gain the vision of the Lord who is all-auspiciousness. Even while doing the ritualistic aarati, we ring the bell.
It is accompanied by the auspicious sounds of other musical instruments such as Nad

**Naswaram and Thavil.**

An added significance of ringing the bell, conch and other instruments is that they help drowned any inauspicious or irrelevant noises and comments that might disturb or distract the worshippers in their devotional ardour, concentration and inner peace.



The outside bell tower, if there is one at a temple, helps to convey to the people of the village that the pooja is about to start.

Prayer at time of ringing the bell:

I ring this bell indicating the invocation of divinity, So that virtuous and noble forces

enter (my home and heart) And the demonic and evil forces from within and without, depart.

Swami Chinmayananda

The sound of the bell helps to disengage mind from ongoing thoughts thus making the mind focus on the rituals and deity.

**What is a kalasha?**

A brass, mud or copper pot is filled with water. Mango leaves are placed in the mouth of the pot and a coconut is placed over it. A red or white thread is tied around its neck or sometimes all around it in a intricate diamond-shaped pattern. The pot may be decorated with designs. Such a pot is known as a kalasha or Purna Kumbha. A kalasha is placed with due rituals on all-important occasions like the traditional house warming (grihapravesa), wedding, daily worship etc. It is placed near the entrance as a sign of welcome. It is also used in a traditional manner while receiving holy personages.

It represents the inert body which when filled with the divine life force gains the power to do all the wonderful things that makes life what it is.

**Why do we worship the kalasha?**

The Kalasha can be used to represent any deity by chanting the appropriate Mantra. Blessings of all the deities are invoked in the kalasha and its water is thereafter used for all the rituals, including the abhisheka.



In normal household events, the Kalasha or Purna Kumbha represents Goddess Luxmi and auspiciousness. The coconut symbolises the head, the water is the life force and the pot represents the body.

The consecration(kumbhaabhisheka) of a temple is done in a grand manner with elaborate rituals including the pouring of one or more kalashas of holy water on the top of the temple tower.

# Tirukkural

## Edited by: Mr S Ratnaswami

The Tirukkural of Tiruvalluvar full of commandments for ethical and humane behaviour, is the pride of the Tamils. It is an outstanding work fit to be recognised as world literature. Scholars who have delved deep into it have described it as 'masterpiece of Tamil literature', 'one of the highest and purest expressions of human thought', 'they are the choicest of moral epigrams' etc.

Tirukkural has been translated into many of the languages of the world. In English alone there are more than forty translations. Tributes to Tirukkural and Tiruvalluvar have been paid by hundreds fo scholars and great men (both foreign and native) a few of which are given below:

'Tiruvalluvar shines as a star in the darkness of night, a lonely flower in the dessert; a light that drives the gloom of ignorance and a beacon - light to the whole world.'

Fr. Beschi

'We may not all be aware even of the name of sage Tiruvalluvar. North Indian people certainly do nto know his name. Few saints have given to the people as much knowledge as he has done in the minimum of words.'

Mahatma Gandhi

'Tiruvalluvar was one of the great geniuses of the world. He is the venerated sage and law giver of the Tamil people. The Kural owes much of this popularity to its exquisite poetic form. It is an apple of gold in a network of silver. The brevity rendered necessary by the form gives an oracular effect to the utterences of this great Tamil Master of Sentences.'

Dr G U Pope

'No wonder that the Kural has continued to attract the best minds of the world down the ages. In our time, apart from the many great savants and statesmen of Tamil Nad, Gandhiji is known to have delved deep into its wisdom. Vinobaji is an acknowledged student of this classic.'

Sardar K M Munshi

'Thiruvalluvar's approach to moral doctrine is marked by a very thorough knowledge of human psychology and a doctrine to help imperfect men with practical hints in the struggle against evil. Throughout we can see how the poet brings everything down the level of practicality without losing hold of the ideal.'

Mootharignar Thiru C Rajagopalachari

'The Kural of Tiruvalluvar, a work consisting of 1330 distichs, on almost every subject connected with moral and political economy and which is regarded by all Tamils

(and perhaps justly) as the finest composition of which the Tamils boast, appears to be not only the best but the oldest Tamil work.'

Dr Caldwell

'With sure stoke the Kural draws the ideal of simple ethical humanity. On the most varied question concerning the conduct of man to the world its utterences are characterised by nobility and good sense. There hardly exists in the literature of the world a collection of maxims in which we find so much lofty wisdom.'

Dr Albert Schweitzer

'Tiruvalluvar stands above all races, castes and sects and he teaches in a general human morality and wisdom.'

Dr M Winternitz

'Nothing in the whole campus of human language, can equal the force and terseness of the distichs in which the author of Kural conveys the lessons of wisdom.'

Rev P Percival

'This is a work of didactic morality whose 1330 couplets are remarkable for their economy and clarity of style, for the wide range of human situations for which they provide guidance and for their unique blend of wordly wisdom and idealistic ethics.'

Dr Leigh Lisher

'Tirukkural has been extolled by savants of East, West as a unique guide to universal existance.'

Elijah Hoole

'The style of the Kural is matchless comparable only with the perfection of the style in Greek.'

Dr A Lehman

'The teaching of Tiruvalluvar is purely eclectic and includes such principles as are common to all systems of morality.'

Dr R W Frazer


'The author of Kural was a kindly liberal minded man and his poetry is a kind of synthesis of the best moral teachings of his age.'

Fr Emmons F White

'This master piece of Tamil and of world literature was very often translated in a nuber of European languages. In that admirable book we find at first *Aram* section, illustrating without any sectarian religious bias, an ideal of good order of universal human interest.'

Dr Jean Filliozat

**Courtesy: Selected Tirukkural Couplets with English Translation, Nov 1998.**


வண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை




இலண்டனில் Setline Data அச்சகத்தால் (தொலைபேசி: 0207 232 0446) அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 10 - 02 - 2019 அன்று வெளியிடப்படுகிறது.